பக்கங்கள்: எட்டு
விலை ரூபா 5-00
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
VALAMPURI

சங்கு 02 வள்ளுவர் ஆண்டு 2032 பங்குனி 26 ஞாயிற்றுக்கிழமை 08-04-2001 தொலைபேசி: 3378 ஒலி: 110

மங்கையரின் அங்கமெல்லாம் தங்க நகைகளால் மின்னிப் பேசிட இன்றேவிரையுங்கள்!
அர்ச்சனா ஜுவலர்ஸ்
118, கஸ்தூரியார் வீதி,
176/1, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
(கி/1710)

★ நோர்வேத்தூதுவர் - தமிழ்ச்செல்வன் சந்திப்பு

# புலிகள்மீதானதடையை நீக்கினால் அரசுடன் சமாதானப் பேச்சு!

## புலிகள் தரப்பில் உறுதிபட தெரிவிப்பு

(வவுனியா விசேட நிருபர்)

சமாதான சூழ்நிலை ஒன்றினை ஏற்படுத்தி விடுதலைப்புலிகள் மீது இலங்கைஅரசு விதித்துள்ள தடைகயையும், தமிழ்மக்கள்மீதான பொருளாதார தடையையும் நீக்குவதுடன்,

இலங்கை அரசு தற்போது மேற்கொண்டுள்ள யுத்தத்தினை நிறுத்தி புரிந்துணர்வு உடன்படிக்கைக்கு மதிப்பளித்து செயற்படவேண்டும். இவ்வாறு செய்தால் மட்டுமே விடுதலைப்புலிகள் இலங்கை அரசுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபடுவார்களென்று தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு. ப. தமிழ்ச்செல்வன் இலங்கைக்கான நோர்வேத் தூதுவர் ஜோண் வெஸ்பேர்க்கிடமும், அவரது பத்திரிகைத்துறைச் செயலாளர் தோமஸ்பென்ஸ் கலனிடம் தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு. ப. தமிழ்செல்வனுக்கும் நோர்வேயின் தூதுவர் ஜோண்வெஸ்பேர்க்கும், அவரது பத்திரிகைத் துறைச்செயலர்களுக்கும் இடையில் இரண்டாவது சுற்றுப்பேச்சு நேற்று நடைபெற்றது.

இப் பேச்சுவார்த்தையின் போது நோர்வேயின் புரிந்துணர்வு உடன் படிக்கை தொடர்பாக இரு தரப்பினராலும் விரிவாக ஆராயப் பட்டது.

நேற்று முன் தினம் நடைபெற்றபேச்சுவார்த்தைசுமார் ஏழு மணித்தியாலங்களாக நீடித்தது இப் பேச்சுவார்த்தையின் போது புலிகளின் சார்பில் சு. ப. தமிழ்ச்செல்வனுடன் அரசியல் துறை நிர்வாக பொறுப்பாளர் சோ. தங்கன், அரசியல் துறைப்பிரமுகர்கள் புலித்தேவன், ஜோஜ் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இப்பேச்சு வார்த்தையின் பின்புலிகளின்அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச் செல்வன் விடுத்த அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது

### ஒருதலைப்பட்ச யுத்த நிறுத்த மும்புலிகளின் இழப்பும்

தமிழீழ விடுதலைப் புலிகள் அடுத்தடுத்து நான்குதடவைகள் அறிவித்த ஒருதலைப் பட்சயுத்த நிறுத்த அறிவிப்புக் கால எல்லைக்குள் ஏற்பட்ட இழப்புக்கள் குறித்து நோர்வேயின் சமாதானக் குழுவிற்கு விளக்கி கூறப்பட்டுள்ளது.

சிறிலங்கா அரசுஎமதுபோர் நிறுத்தம் குறித்து கருத்தில் கொள்ளாதபோதும்நாம்ஏன் தொடர்ந்து போர் நிறுத்தத்தை கடைப்பிடித்தோமெனநோர்வேத் தூதுக் குழுவிடம்தெளிவாகஎடுத்துக்கூறியுள்ளோம்.

### புரிந்துணர்வுஉடன்பாடு அரசினால் மாற்றம்

புரிந்துணர்வு உடன்பாட்டில் காணப்படும் குறைபாடு

→ 8ஆம் பக்கம் பார்க்க

## யுத்தக் கைதிகள் நால்வர் புலிகளால் விடுதலை

தமிழீழ விடுதலைப் புலிகளினால் சிறைப்பிடிக்கப்பட்டிருந்த மூன்று மாலுமிகள் உட்பட நான்குபேர் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் விசேட பணிப்பின் பேரில் நேற்று விடுதலைசெய்யப்பட்டனர்.

கடந்த 4 முதல் 8 வருடகாலமாக விடுதலைப் புலிகளின் காவலில் இருந்த இவர்களில் ஒருவர் இராணுவவீரர் என்றும், ஏனையவர்களில்

→ 8ஆம் பக்கம் பார்க்க

## கத்தி வெட்டுக்கு சாரதி மரணம்

(ஏழாலை)

மீன்வியாபாரி ஒருவரின் கத்தி வெட்டுக்கு இலக்காகி பஸ் சாரதி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் நேற்று பிற்பகல் 4.30மணியளவில் மல்லாகம் அளவெட்டி வீதியில் அளவெட்டி தபாலகம் முன்பாக இடம்பெற்றுள்ளது.

மேற்படி கத்தி வெட்டுக்கு இலக்கானவரைதெல்லிப்பழை மாவட்ட வைத்தியசாலைக்குக்கொண்டு செல்லும்போது அவர் இடையில மரணமானதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு கத்தி வெட்டுக்கு இலக்காகி உயிரிழந்தவர் அளவெட்டி வடக்கு கலைமகள் வீதியைச்சேர்ந்த நான்கு பிள்ளைகளின் தந்தையான நாகமணி நாகராசா (வயது 59) எனத்தெரிய வந்துள்ளது.

## புலிகளின் தடையை நீக்க ஐரோ.பாராளுமன்றில் மனு தாக்கல் செய்யப்படும்!

[லண்டன்]

விடுதலைப்புலிகள் மீது பிரிட்டிஸ் அரசு விதித்துள்ள தடையை நீக்குமாறு கோரி ஐரோப்பிய பாராளுமன்றத்தில் மூன்று மனுக்கள் தாக்கல் செய்யப்படவுள்ளன.

லண்டனில் உள்ள தமிழர் தகவல்மையம் இந்த மனுக்களை வெவ்வேறு பெயர்களில் தாக்கல் செய்யவுள்ளது லண்டனில் உள்ள ஆங்கில நிறுவனம் ஒன்றில் பணிபுரியும் சட்டத்தரணிகள் இந்த வழக்குகளைத் தாக்கல் செய்வதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளனர். (ம)

## தமிழ்சிங்களபுத்தாண்டைமுன்னிட்டு கொழும்பில் பலத்த பாதுகாப்பு

[கொழும்பு]

எதிர்வரும் தமிழ்-சிங்கள புதுவருடத்தை ஒட்டி தலைநகர் கொழும்பின் பாதுகாப்பு பலப்படுத்தப்படுவதாகவும் 24 மணிநேர ரோந்துப் பணி தீவிரப்படுத்தப் பட்டுள்ளதாகவும் பொலிஸ் தலைமையலுவலகம் தெரிவித்துள்ளது.

தமிழ்-சிங்கள புதுவருடக் கொண்டாட்டங்களுக்கான ஆயுத்தங்களை மக்கள் செய்து வரும் அதேவேளை சில தீய சக்திகள் நாசகார சதிமுயற்சிகளில் ஈடுபடலாம் என்ற சந்தேகத்தின் பேரிலேயே கொழும்பு நகரின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

கொழும்பு நகரின் பாதுகாப்பை பலப்படுத்த பிற மாவட்டங்களிலிருந்து மேலதிகமான பொலிஸார்அழைக்கப்பட்டுள்ளனர். [வ]

## கறப்பு துணியால் வாயை கட்டி மன்னாரில் உண்ணாவிரதம

[மன்னார்]

மன்னாரில் கைது செய்யப்பட்ட இரு பெண்களை கடற்படையினர் பாலியல் வன்முறைக்கு உட்படுத்தியமையைக் கண்டித்து நேற்று மன்னாரில் மாபெரும் உண்ணாவிரதப் போராட்டம் நடைபெற்றது

மன்னார் புனித செபஸ்தியான் ஆலய முன்றலில்நடைபெற்ற இவ்வுண்ணாவிரதப் போராட்டத்தில் சுமார் நாலாயிரம் பேர் கலந்து கொண்டனர்.

இவ்உண்ணா விரதத்தில்

→ 8ஆம் பக்கம் பார்க்க

# பண்டா-செல்வா ஒப்பந்தத்திற்கு ஏற்பட்ட கதி நோர்வேயின் சமாதான முயற்சிக்கு ஏற்படாது

## நேயர்களின் கேள்விக்கு எரிக்சோல் பதில்

அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு மிடையில் இனப்பிரச்சினைக்கான தீர்வொன்று காணப்படும்போது முஸ்லிம்களின் நலன்களும் கருத்தில் கொள்ளப்படுமென நோர்வேயின் சிறப்புபிரதிநிதி எரிக்சோல்ஹெய்ம்நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

இணையத் தளமொன்றின் மூலம்சர்வதேசரீதியாகநேயர்களின் கேள்விகளுக்கு பதிலளித்து வரும் எரிக்சோல்ஹெய்ம் முஸ்லிம்களின்நலன் கருதும்விடயத்தில் அரசும்விடுதலைப்புலிகளும் உணர்ந்து செயல் படுவார்களென நம்பிக்கை இருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

சமாதான முயற்சியைப் பொறுத்தவரை அரசு-விடுதலைப்புலிகள்பேச்சுவார்த்தை மேசைக்கு கொண்டு வரப் பட்டபின்பு நோர்வேயின்பங்களிப்பு முற்றுப் பெறுமா? அல்லது தொடருமா? என்று கேட்கப் பட்ட போது, இதுபற்றி அரசும் விடுதலைப் புலிகளும்தான் தீர்மானிக்க வேண்டும் இருதரப்பினருக்கும் பயன்தரும் வகையில் உதவுவதே நோர்வேயின் நோக்கம் என்று பதிலளித்துள்ளார்.

பண்டா-செல்வா ஒப்பந்தம், டட்லி-செல்வா ஒப்பந்தத்திற்கு நடந்த கதி நோர்வேயின் சமாதான முயற்சிக்கு ஏற்படமாட்டாதா என்று கேட்கப்பட்ட கேள்விக்கு பதிலளித்த எரிக்சோல் தற்போதையசமாதானமுயற்சியை பொறுத்தவரை மூன்றாந்தரப்பொன்றின் மூலம் மேற்கொள்ளப் படுவதால் அந்த ஒப்பந்தங்களுக்கு ஏற்பட்டநிலைதற்போதையசமாதானமுயற்சிகளுக்கு ஏற்படுவது மிகவும் கடினமானது என்றார். (ந)

## கொழும்பு திரும்பினர்

[வவுனியா]

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர்களுடன் நேற்று இரண்டாவது சுற்றுப் பேச்சில் ஈடுபட்டிருந்த இலங்கைக்கான நோர்வே தூதுவர் ஜோண் வெஸ்போகதலைமையிலான சமாதானக்குழுவினர் நேற்று மாலை பிரமனாளங்குளம் வழியாகவவுனியாசென்று அங்கிருந்து உலங்கு வானூர்தியில் கொழும்புக்கு புறப்பட்டு சென்றுள்ளனர். [வ]

**சோதிடபலன்**

# மனிதனின் குண இயல்புகளை அப்பட்டமாக வெளிக் கொணரும் எண் சோதிடக்கலை

(சென்றவாரத் தொடர்ச்சி)

**பிறந்தஎண் -5 விதிஎண் - 1**

சொந்த முயற்சியால் முன்னேறுவர். தர்ம குணம் படைத்தவர். கலை உள்ளம் படைத்தவர். பெயர் எண் நன்கு அமையா விட்டால், மனம் தீய வழியில் இழுத்துச் செல்லும், உத்தியோகம், நல்ல மனைவி, நல்ல ஆரோக்கியம், நல்லகுழந்தைகள், பெரும் செல்வம் எல்லாம் கிடைக்கும். சுறுசுறுப்பு கொண்ட இவர்கள் என்றும் ஓடோடி உழைப்பர்; யோசனையும், புத்தியும் மின்னல் வேகத்தில் வேலை செய்யும். இவர்கள் பார்ப்பதற்கு ஓரளவு உயரமாகவும், கவர்ச்சியான தோற்றத்துடனும் இருப்பர்.

தன்னம்பிக்கையும், விடா முயற்சியும் வெற்றி தரும் என்ற கொள்கை உடையவர் ஒரு காரியத்தில் இறங்கி விட்டால் போதும், அதிலேயே மூழ்கி விடுவர். தூக்கத்தைக் கூடக் கைவிடுவர். ஏழைக் குழந்தைகளுக்கு உதவி செய்வதில் ஆர்வம் உள்ளவர். இவர்களுக்கு இரத்தக்கொதிப்பு, நரம்புத் தளர்ச்சி ஏற்படலாம். மற்றும் உஷ்ண சம்பந்தமான வியாதிகளும், நீரிழிவு வியாதியும் வரலாம். பெயர்எண் பொருத்தமாக அமைந்து விட்டால் நோய் வராமல் சௌக்கியமாக வாழலாம்.

**பிறந்தஎண் -5 விதிஎண் - 2**

பழமையும், புதுமையும் கலந்து நடத்தும் வாழ்க்கையை விரும்புவர். சட்டம், சமயம், வைத்தியம், தத்துவம், கலை போன்றவற்றில் ஆர்வம் மிகுந்தவர்; வீட்டை அழகு படுத்துவதிலும், ஆடம்பரப்பொருட்களை வாங்கிச் சேர்ப்பதிலும் ஆர்வம் உள்ளவர். எதிலும் முன் எச்சரிக்கை கொண்ட இவர்கள் பிறரை எளிதில் நம்பமாட்டார்கள். வெளியில்ஒருகாரியம் நடக்காவிட்டால் வீட்டில் உள்ளோரைத் திட்ட ஆரம்பிப்பார்.

சற்று குள்ளமாகவும், அழகாகவும் காட்சியளிப்பர். பெயர் எண் பொருத்தம் இருந்து விட்டால் தான் செய்கின்ற உத்தியோகத்திலும், தொழிலும் உயர்ந்த நிலையை அடைவர். இவர்களுக்கு ஆஸ்த்மா வரலாம்; அடிக்கடி சளி பிடிக்கும்; மற்றும் மூலம், வயிற்றுக் கோளாறு, இரத்தக் கொதிப்பும் வரலாம்; பெயர் எண் பொருத்தமாக அமைந்தால் இந்தத் தொந்தரவே இராது.

**பிறந்தஎண் - 5 விதிஎண் - 3**

எதிலும் அவசரப்பட மாட்டார்கள். ஆழ்ந்து யோசித்துத்தான் செயற்படுவார்கள். அடக்கமாகப் பேசுவர், நினைத்த காரியத்தை நோக்கியே செல்வர். பெயர் எண் பொருத்தம் இவர்களை உயர்த்தி வைத்து விடும். புதிய கண்டு பிடிப்பில் நாட்டம் கொண்டவர்கள். தொழிலில் நல்ல இலாபம் பெறுவர். உத்தியோகத்திலிருந்தாலும், பெரிய பதவியை அடைவர். அதிகம் பேச மாட்டார்கள். எதையும் சிந்தித்து செயற்படுவர்.

ஓரளவு உயரமாகவும், கவர்ச்சியாகவும் இருப்பர்; இளமையிலேயே சிலருக்கு முடி உதிர்ந்து விடும். சுறுசுறுப்பான இவர்கள் எப்பொழுதும் எதையேனும் செய்து கொண்டேயிருப்பர்; எல்லோரும் நன்கு மதிக்கும் மனிதராக வாழ்வர். இவர்களுக்கு கண்நோய், இரத்தக்கொதிப்பு வரலாம். மற்றும் மூட்டுவலி, உஷ்ண வியாதிகளும் வரலாம்; பெயர் எண் பொருத்தமாக அமைந்து விட்டால், எந்தத் தொந்தரவும் இல்லாமல் சௌக்கியமாக வாழலாம்;

**பிறந்தஎண் -5 விதிஎண் -4**

சற்று உயரமாகவும், நன்கு கவர்ச்சியாகவும் காட்சியளிப்பர். உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசத் தெரியாது. இதனால் இவர்களுக்குப் பகை உண்டாகலாம். மற்றவர் துன்பங்களைத் துடைக்க முன்வருவர்; இவர்களது மனம் எப்பொழுதும் எதைப் பற்றியேனும் திட்டம் தீட்டிய வண்ணமாகவே இருக்கும். சுதந்திரப் பிரியர், அதனால் எவருக்கும் அடங்கமாட்டார்; இவர்கள் வாகனப் பிரியர், பிறருக்குத் தீங்கு செய்யாத இவரை எவரேனும் எதிர்க்க நினைத்தால் எதிரியை எப்படியும் சின்னாபின்னமாக்கி விடுவார். பெயர் எண் பொருத்தம் உண்டானால் ஆண்டவன் அருள் புரிந்து கொண்டேயிருப்பார்.

இவர்களுக்கு நரம்புத் தளர்ச்சி ஏற்படலாம் முன் கோபத்தைத் தடுக்கவும். மற்றும் இருதயவியாதி, இரத்தக்கொதிப்பு, உஷ்ணம் சம்பந்தப்பட்ட வியாதிகள் எல்லாம் வரலாம். பெயர் எண் பொருத்தமாக அமைந்திருந்தால் பிணியற்று சௌக்கியமாக வாழலாம்.

**பிறந்தஎண் 5 விதிஎண் - 5**

பேரறிவும், பெருமை செல்வமும் கொண்டமனிதர்களாக வாழும் பாக்கியமுடையவர்கள். எதிலும் துரிதமாகச் செயற்படுவர். பலருடைய வம் போன்றவற்றில் ஆராய்ச்சியுள்ளவராக விளங்குவர். உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசத்தெரியாதவர். இவர்கள் மனம் அழகான பொருள்களைக் கண்டு ரசிக்கும் இவர்கள் பெயர் எண் சரியாக அமைந்துவிட்டால் வாழ்க்கையில் உச்ச நிலையை அடைவர். பார்ப்பதற்கு ஓரளவு உயரமானவர்களாகவும், கவர்ச்சியானதோற்றமுடையவர்களாகவும் இருப்பர்; வேலை ஆரம்பித்தால் அசுர வேகத்தில் செய்துமுடிப்பர்;

மற்றவர்களை அதிகாரம் செய்தும், மகிழ்வித்தும் பொருளீட்டும் வழிதெரிந்தவர்கள். இவர்களுக்குப் பல்வேறு தொழில் புரிபவர்களின் உதவி கிடைக்கும். இவர்களுக்கு உடலுறவு சம்பந்த

**பேராசிரியர் என். சாமி**

ஆதரவு இவர்களுக்குக் கிடைக்கும். பெயர் எண் பொருத்தமாக அமைந்து விட்டால் நாட்டின் மிக முக்கிய மனிதராக வாழ்வர்; எதையும் சீக்கிரம் செய்து முடிக்க வேண்டும்; என்று எண்ணுபவர் சொல்லும் காரியத்தைப் பிறர் செய்யவில்லையென்றால் கடும் கோபம் வந்து விடும், சில நேரங்களில் குழந்தைபோல் பழகுவர்;

தன்னால் முடியாதது ஒன்றும் இல்லை என்று எண்ணுபவர். புதுமையாக எதையாவதுசெய்யவேண்டும்என்று ஆர்வம் கொண்டவர். எந்தப் பிரச்சினை வந்தாலும் அதைத் தூக்கி எறிந்து விடுவர். இவர்களுக்குப் பல வழிகளில் வருவாய் வந்து கொண்டேயிருக்கு. இவர்களுக்கு மூட்டுவலி, முதுகு வலி, பல்வலி என்று வந்து நீங்கும். மற்றும் இவர்களுக்கு இரத்த அழுத்தம் வர வாய்ப்புண்டு. பெயர் எண் பொருத்தமாக அமைந்து விட்டால் எந்தத் தொந்தரவும் இல்லாமல் சௌபாக்கியமாக வாழலாம்.

**பிறந்த எண் -5 விதி எண்-6**

சமயம், சட்டம், மருத்துவம் போன்றவற்றில்... [continues as above]

மான நோய்கள் வர வாய்ப்புண்டு. மற்றும் நீர் சம்பந்தமான வியாதிகளும் வரலாம், பெயர் எண் பொருத்தமாக அமைந்திருந்தால், எப்பிணிகளும் வராமல் ஆரோக்கியமாக வாழலாம்;

**பிறந்த எண் -5 விதி எண் -7**

வீட்டைத் தூய்மையாக வைத்துக்கொள்வதில் ஆர்வம் மிகுந்தவர். சமுதாயத்தில் பெரிய மனிதராக வாழ்வார். ஆனால் பெயர் எண்பொருத்தம் வேண்டும். தைரிய சாலி போல் தோன்றினாலும் உள்ளூரப் பயந்தாங்கொள்ளியே; இவர்களுடைய முன்கோபத்தைக்கண்டு எல்லோரும் அஞ்சி ஒதுங்குவர், கடவுள் நம்பிக்கை கொண்ட இவருக்குப் புனித யாத்திரை செய்வதில் அதிக ஆர்வம் இருக்கும், இவர்களுக்குப் பல்வேறு தரப்பிலும் நண்பர்களிருப்பினும், எல்லோரிடமும் நிரந்தரமாகப் பழக்கம் வைத்துக் கொள்ள மாட்டார்;

எப்போதும் எளிமையான ஆடையிலேயே தூய்மையாகத் தோன்றுவர்; சிறந்த சிந்தனை சக்திபடைத்தவர். தன் மனதில் இருப்பதையெல்லாம் வெளியிற் சொல்லாது மனம் புழுங்குவர்; இவர்களுக்கு வாய்வுக்கோளாறுகள ஏற்படலாம்; மற்றும் மனவியாதி, கண், காது நோய்கள் வரலாம். பெயர் எண்பொருத்தம் அனைத்தையும் தடுத்துவிடும்.

**பிறந்த எண் -5 விதி எண்-8**

எப்பொழுதும் சுறு சுறுப்பாக இருக்கும் இவர்கள் ஓய்வெடுக்க நினைத்தால் முழுச் சோம்பேறியாய் இருப்பர். என்றும் இவர்களுக்கு ஆண்டவன் அருள் உண்டு. சட்டம், சமயம், கணிதம், சோதிடம் போன்றவற்றில் இவர்களுக்கு ஆராய்ச்சி இருக்கும். தன்னால் முடிந்தவரை பிறருக்கு உதவுவர். வாழ்க்கையில் முன்னேற்றம் காணவேண்டும் என்ற குறிக்கோளோடு அயராது உழைத்துக் கொண்டிருப்பர். பெயர் எண் பொருத்தம் இருந்தால் வாழ்க்கையில் உச்சஸ்தானத்தை அடைவார்கள்;

எந்தக்காரியத்தில் இயங்கினாலும் அதைச்செய்து முடிக்கும் வரை அயராது உழைப்பர்; தன் தொழிலாலும், உத்தியோகத்தாலும் உயர் நிலையை அடைந்து, வீடு, வாகனம், நிலம் போன்ற அனைத்து வசதிகளும் பெறுவர். இவர்களுக்கு வயிற்றுக் கோளாறு ஏற்படலாம்; மற்றும் மூட்டுவலி, முதுகுவலி, கண் வலி என்று ஏற்பட்டுச் சரியாகிவிடும். பெயர் எண் பொருத்தம் அனைத்தையும் தவிர்த்துவிடும்;

**பிறந்த எண் -5 விதி எண்-9**

கையில் பணம் இருந்தால் போதும்; எதிலும் தாராளம் தான். கையில் பணம் இல்லாவிட்டாலோ தனிமையில் வருந்துவர். பெயர் எண் பொருத்தம் இல்லாவிட்டால் இவர்கள் காமுகர்களாய் இருப்பர். பிறருக்கு ஊக்கம் கொடுப்பதில் கைதேர்ந்தவர்களான இவர்கள், தனக்கு வரும் கஷ்டத்தைப் பிறரிடம் கூறாது தானாகவே தைரியப் படுத்திக் கொள்வர்; கலை ஆர்வம் கொண்டவர் இசைப் பிரியர்.

இவர்களது வாழ்க்கை போராட்டத்திலேயே உயர்ந்துகொண்டு செல்லும்; எக்காரியத்தில் இறங்கினாலும், அதில் இரகசியமானவருவாயைத் தேடிக் கொண்டே செல்வர். பொதுவாக இவரைப் பொதுசன உபகாரி என்றே சொல்வர்; இவர்களுக்கு நீர் வியாதி, மூட்டுவலி, முதுகுவலி ஏற்படலாம்; மற்றும் இரத்தக் கொதிப்பு, இருதய வியாதியும் வரலாம் பெயர் எண் பொருத்தமாக அமைந்து விட்டால், பிணிஎதுவுமே வராமல்சௌக்கியமாக வாழலாம்; —தொடரும்

---

**தற்கொலைக் குண்டுதாரி என்ற**

# சந்தேகத்தில் கைதான பெண் உயர் நீதிமன்றினால் விடுதலை

(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் தற்கொலை குண்டுதாரி என்ற சந்தேகத்தின் பேரில் நீர்கொழும்பு பொலிஸாரால் அண்மையில் கைதுசெய்யப்பட்ட, யோகலிங்கம் விஜிதா (ஊர் காவற்றுறை) என்ற பெண்ணை உயர் நீதிமன்றம் நேற்று முன்தினம் விடுதலை செய்துள்ளது;

இந்த பெண், பொலிஸாரால் தடுத்துவைக்கப்பட்டிருந்தவேளை சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டதுடன் இது குறித்து விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமெனவும் நீதியரசர் சரத்என் சில்வா முன்னர் உத்தரவிட்டிருந்தார்.

இவ்உத்தரவின் பெயரிலேயே மேற்படி பெண் விசாரணைகளின் பின்னர்நீதியரசர் சரத் என் சில்வாவினால் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

சம்பந்தப்பட்ட பெண்ணை இம்சைப்படுத்தியதாக கூறப்பட்ட பொலிஸார்மீது விசாரணைகள் நடத்தப்பட்டு வருவதாக சட்டமா அதிபர் திணைக்களத்தினால் உயர் நீதிமன்றத்துக்கு அறிவிக்கப்பட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது; (உ-5)

---

பார்ப்போரிடம்....

பெரிய அரங்கச்செயற்பாடாக யாழ்ப்பாணத்தில் இது ஒன்றே இருக்க முடியும் என நினைக்கிறேன்.

**பரந்த செயற்பாடு**

இன்று இச்செயற்பாடு பரந்து விரிந்த திருமறைக் கலாமன்றத்தின் ஒவ்வொரு கிளைகளிலும் சிறப்பாகமேற்கொள்ளப்பட்டு வருகின்றது. உதாரணமாக இவ்வருடம் இலங்கையில் திருகோணமலை, கொழும்பு பிறநாடுகளில் கனடா, பிரான்ஸ், நோர்வே போன்ற நாடுகளிலும் இம்மன்றத்தின் கிளையினரால் மேற்கொள்ளப்படுகிறது.

யாழ்ப்பாணத்தில் 'காவிய நாயகன்' என்ற பெயரில் 5,6, 7,8 ஆகிய 4 நாட்களுக்கு மேடை யேற்றப்படுகின்றது. இந் நாடகம் மனிதத்துவத்தின் தேடல், மனித உரிமைகள், சிறுவர் உரிமைகள் பற்றிப் பேசுகிறது மனிதத்துவம் என்ற காவியத்தின் நாயகனாக கிறிஸ்துவைச் சித்தரிக்கின்றது. ஏறத்தாழ 40 க்கு மேற்பட்ட திருப்பாடுகளின் சாட்சி நாடகப் பிரதிகளை ஆக்கிய மரியசேவியர் அடிகளே இதனையும் எழுதி நெறிப்படுத்துகின்றார்;

ஈழத்தின் மரபுசார் வழியில் வளர்த்தெடுக்கப்பட்ட நாடகங்களில் ஒன்றாக இதனைக் கருதி மத எல்லைக்கப்பால் முக்கியத்துவம் அளித்தல் அனைவரினதும் கடமையாகும்;

---

**மன்னார் சம்பவத்திற்கு**

# எதிர்ப்பை தெரிவிக்க யாழ்மக்கள் தவறிவிட்டனர்

## கியூடெக் இயக்குநர் சாடல்

(யாழ்ப்பாணம்)

மன்னாரில் படையினரால் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டதாகக் கூறப்படும் இரு பெண்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைக்காக எமது யாழ்ப்பாணத்தவர்கள் குறைந்த பட்சம் கறுப்புப் பட்டி அணிந்தாவது தமது எதிர்ப்பைக் காட்டக் கூட முன்வரவில்லை.

நேற்று முன்தினம் திருநெல்வேலி விவசாயப் பண்ணை மண்டபத்தில் நல்லூர்ப் பிரதேச செயலக சமுர்த்தி உத்தியோகத்தர்களுக்கான மது ஒழிப்பு தொடர்பான பயிற்சிப்பட்டறையில் கலந்து கொண்டு உரையாற்றிய மனித முன்னேற்ற நடுநிலையம் [கியூடெக்] இயக்குநர் சி. ஜீ. ஜெயக்குமார் அடிகளார் இவ்வாறு குறைப்பட்டார்.

அவர் மேலும் தொடர்கையில், மன்னாரில் இரண்டு இளம் தாய்மார்களுக்கும் இழைக்கப்பட்ட கொடுமைகள் தொடர்பான விபரங்களைமன்னார்மாவட்டஆயர் தமக்கு அனுப்பியிருந்ததாகவும் அதைப்படித்த போது ஒரு மனிதனுக்கு எந்த அளவுக்கு உயர்ந்த பட்சகோபம் வருமோ அதே அளவு கோபம் ஏற்பட்டதாகவும் குறிப்பிட்டார்;

இந்தப் பிரச்சினை வேறு ஒரு பிரதேசத்தில் நடந்துள்ளது என்பதால் நமக்கேன் வம்பு என்ற சுயநலப் போக்கைக் கைவிட்டு அனைவரும் ஒன்றிணைந்து குரல்கொடுக்க முன்வரவேண்டுமென அடிகளார் கேட்டுக் கொண்டார்; (உ-15)

---

**25வகையான**

வகைகள், சாரய வகைகள், பிறவுண்பேப்பர், சவர்க்கார வகைகள், முச்சக்கர வண்டி, கோழிக்குஞ்சு, படுக்கைவிரிப்புக்கள், கறுப்பு, பச்சை மண்நிறம் தவிர்ந்த ஏனைய பெயின்ற்வகை முதலியனவாகும்; (ம)

## சுகாதாரக் கழகம் அமைப்பு

(ஆவரங்கால்)

யாழ். அச்சுவேலி மத்திய கல்லூரியில், அதிபர் திருமதி எஸ். கனகராசா தலைமையில் அண்மையில் சுகாதாரக் கழகம் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

பாடசாலையில் சுகாதார சேவைகளைத் தடங்கலின்றி முன்னெடுக்கும் வகையிலேயே இக்கழகம் ஆரம்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(உ-57)

## வீதி திருத்தம் ஆரம்பம்

[மந்துவில்]

வரணியில் இருந்து சவுனாவல் வெளியூடாக செல்லும் வீதியின்இடை நிறுத்தப்பட்ட திருத்த வேலைகள் தற்பொழுது நடைபெற்று வருகின்றன.

(உ-39)

# யுத்தத்தின்கொடூரம் குடாநாட்டுச் சிறுவர்களில்பிரதிபலிப்பு

# அடிப்படைகளைஆராய்ந்து தடுத்து நிறுத்துமாறு

# கனேடியப் பேராசிரியர் ஆலோசனை

(தென்மராட்சி)

இலங்கையில் நீண்ட காலமாக இடம்பெற்று வருகின்ற யுத்தம் பல சிறுவர்களை முடமாக்கியுள்ளது இதனால்அவர்களது எதிர்காலம் பாதிக்கப்பட்டுவிட்டது. யுத்தத்தின் கொடூரத்தால் யாழ்ப்பாண மாவட்டத்தில் சிறுவர்கள் போஷாக்கின்மை, பிறப்பில் நிறைகுறைவு போன்ற குறைபாடுகளுடன் இருக்கின்றனர்.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் பிறந்த பல பிள்ளைகளின் நிறைகள் 265 கிராமுக்கும் குறைவாக இருந்துள்ளமையை நான் பார்த்துள்ளேன்.

இந் நிலையின் பின்னணிகளையிட்டு நாம் கவலை கொள்வதால் மட்டும் பயனில்லை. இந்த நிலைக்கான அடிப்படைக் காரணிகளை ஆராய்ந்து அவற்றைத் தடுத்து நிறுத்த முயலவேண்டும். யாழ்ப்பாண சமுதாயம் ஆரோக்கியமான சமுதாயமாக இருத்தல் வேண்டும்.

இவ்வாறு கடந்த புதன் கிழமை யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தில் நடைபெற்ற யாழ்ப்பாணம் விஞ்ஞான சங்கத்தின் 9 ஆவது வருடாந்தச் செயலமர்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்து வைத்து உரையாற்றிய உலகப் புகழ் பெற்ற விஞ்ஞானியான கனடாவைச் சேர்ந்த மக்கில் பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் திருமதி. குளோடெட் பார்டின் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் விஞ்ஞானச் சங்கத்தின் தலைவர் பேராசிரியர் கே. பாலசுப்பிரமணியம் தலைமையில்நடைபெற்ற செயலமர்வின் ஆரம்ப வைபவத்தில் நூற்றுக் கணக்கான கல்விமான்கள், விஞ்ஞான ஆர்வலர்கள் பங்குபற்றியிருந்தனர்.

பிரதமவிருந்தினரான பேராசிரியர் திருமதி. குளோடெட்பார்டின் அங்கு தொடர்ந்து பேசுகையில்;

உலகிலுள்ள பல்வேறு நாடுகளில் இடம்பெற்றுவரும் இனத்துவம் தொடர்பான யுத்தத்தினால் ஆண்டு தோறும் சுமார் 2 மில்லியன் சிறுவர்கள் மரணமடைந்து வருகின்றனர். முன்னைய காலங்களிலும் பார்க்க இன்றைய கால கட்டத்தில் சுகாதார, மருத்துவ பிரச்சினைகள் அதிகரித்து வருகின்றன.

உலக விஞ்ஞான அபிவிருத்திக்கும், வளர்ச்சிக்கும் இன்றைய சுகாதார மருத்துவ பிரச்சினைகள் பெரும் சவால்களாக விளங்கி வருகின்றன. மலேரியாநோயின் பரம்பலை ஒழிப்பதே பெரும் பொறுப்பாக இருக்கின்றது. அத்துடன் எச்.ஐ.வி. வைரஸ் மூலம் பரவி வருகின்ற எய்ட்ஸ் நோயும் உலகில் நினைக்க முடியாதளவுக்குப் பெருகி வருகின்றது.

இவ்வேளையில் விஞ்ஞானிகள், புத்திஜீவிகள், அபிவிருத்திப் பணியாளர்கள் யாவரும் ஒன்றிணைந்து தமது அறிவையும், அனுபவத்தையும் பொதுநன்மை கருதி வழங்கி கூட்டுப்பொறுப்புடன், ஒத்துழைக்க வேண்டும். அதற்கான உரியதருணம் வந்துள்ளதுஎன்றும்யாழ் மாவட்டத்தில் விஞ்ஞானச் சிந்தனைகளை உருவாக்குவதில் முனைப்புடன் செயற்பட்டுவரும் யாழ்ப்பாண விஞ்ஞானச் சங்கத்தின்செயற்பாடுகள் மேலும் பெருகவேண்டும் எனக் குறிப்பிட்டார்.

(உ-77)

## விதை இனங்கள்விவசாய உபகரணங்கள் வழங்கல்

(யாழ்ப்பாணம்)

பட்டினிக்கு எதிரான நிறுவனத்தினால் உடுவில் பிரதேச செயலர் பிரிவிற்கு உட்பட்ட சங்குவேலி தெற்கு ஜே-187, இணுவில் கிழக்கு ஜே - 189, பிரிவுகளில் இடம்பெயர்ந்து வாழும் விவசாயிகளுக்கு அண்மையில் விவசாய உபகரணங்கள், விதை இனங்கள் என்பன வழங்கப்பட்டுள்ளன:

இணுவில் கிழக்கில் 21 பயனாளிகளுக்கும், சங்குவேலி தெற்கு 31 பயனாளிகளுக்கும் தலா ஆயிரம் ரூபா பெறுமதியான மேற்படி பொருட்கள் அந்தந்த கிராம அலுவலர் அலுவலகத்தில் வைத்து வழங்கப்பட்டன. (உ-2)

## ஆரம்பப் பிரிவுக்கான பரிசளிப்பு விழா

[கோப்பாய்]

வயாவிளான் மத்திய மகாவித்தியாலயமும் நாவற்குழி மகாவித்தியாலயமும் இணைந்து நடத்தும் ஆரம்பப்பிரிவுக்கானபரிசளிப்புவிழாஎதிர் வரும்10ஆம்திகதிசெவ்வாய்க் கிழமை காலை 9.00மணியளவில் பாடசாலைமண்டபத்தில் அதிபர் ஆ.சி.நடராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவில், பிரதம விருந்தினராக வலிகாமம் வலயக் கல்விப்பணிப்பாளர் வீ இராசையாவும் சிறப்புவிருந்தினராக தென்மராட்சிக் கல்வி வலய ஆரம்பக்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் த சிறீஸ்கந்தராஜாவும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர் (உ-79)

## கரப்பந்தாட்டப்போட்டி நேற்றும்இன்றும்

(யாழ்ப்பாணம்)

யாழ் பிரதேச செயலகங்களுக்கிடையே நடைபெற்று வரும் விளையாட்டுப்போட்டிகளின் தொடரில் நேற்று கரப்பந்தாட்டப் போட்டி ஆரம்பமானது.

இப் போட்டிகள் ஆண், பெண் பிரிவினர்க்கிடையே நேற்றும் இன்றும் மல்லாகம் ஸ்ரீ பாஸ்கரன் விளையாட்டு அரங்கில் நடைபெற்று வருகின்றன.

போட்டிகள் காலை 8.00 மணிக்கு ஆரம்பமாகவுள்ளதால் விளையாட்டுக் கழகங்கள் கால தாமதத்தைத் தவிர்த்து போட்டிக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு யாழ். மாவட்ட விளையாட்டுத்துறைஅதிகாரி ஏ.எவ். ஜேரூபசிங்கம் அறிவித்துள்ளார்.

(உ-10)

## இருவழிப்பயண ஒழுங்கு பரீட்சார்த்த ஆரம்பம் றான் அலுவகம் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

திருமலை நகரம் கப்பலுக்கான இருவழிப்பயண ஒழுங்குகள் பரீட்சார்த்தமாக நாளை திங்கள் முதல் மேற்கொள்ளப்பட இருப்பதால் இச்சலுகையைப் பயன்படுத்த விரும்புவோர் திங்கள் புதன் ஆகிய நாட்களில் தமது பதிவுகளை மேற்கொள்ளலாம்என றான் அலுவலக மேற்பார்வையாளர் கபரராசசேகரன் அறிவித்துள்ளார்.

இவ்வாறு பதிவுகளை மேற்கொள்வோர் கைக்கொள்ள வேண்டிய வழிமுறை குறித்த அறிவுறுத்தல்களும் இதன் பிரகாரம்அறிவிக்கப்பட்டுள்ளன.

அவை வருமாறு,

றான் அலுவலகத்தில் ஒரு வழிப்பயணச்சீட்டைப் பெற்றுச் செல்லும்போது திரும்பும் திகதியையும் பதிந்து செல்ல வேண்டும்.

குறித்த திகதியில் திருமலையிலிருந்து பயணத்தை மேற்கொள்ளாவிட்டால் திருமலை பிரதேச செயலகத்தில் பாதுகாப்பு அனுமதியைப் பெற்றே பயணத்தை மேற்கொள்ளலாம்.

திருமலையில் இருந்து காங்கேசன்துறைக்குப் பயணத்தை மேற்கொள்வோர்க்கான பயணச்சீட்டை திருமலையிலேயே பெற வேண்டும்.

இச்சலுகை யாழ்ப்பாணத்தில் இருந்து பயணித்த திகதியில் இருந்து ஒருமாத காலத்திற்கே செல்லுபடியாகும்.

(உ)

## சின்னமடு பாடசாலையை இயக்க நடவடிக்கை

(ஊர்காவற்றுறை)

கடந்த 10 வருடங்களாக இயங்காதிருந்த யா/சின்னமடு றோ. க. பாடசாலை இரண்டாம் தவணை தொடக்கத்தில் இருந்து மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளது.

மேற்படி பகுதியில் இருந்து இடம்பெயர்ந்த மக்கள் மீளக் குடியமர ஆரம்பித்ததை அடுத்து மாணவர் நலன் கருதி இவ் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதற்கான நடவடிக்கையை சின்னமடு கிராம அலுவலர் மற்றும் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் இணைந்து மேற்கொண்டமைகுறிப்பிடத்தக்கது.

இதேவேளை, இப் பாடசாலையின் ஒரு பகுதி சேதமடைந்திருப்பதும் குறிப்பிடத்தக்கது.

### உண்மையை வெளிக்கொணர்ந்த

## பத்திரிகையாளருக்கு கொலைப் பயமுறுத்தல்?

மன்னாரில் இரண்டு தமிழ்ப் பெண்களுககு நேர்ந்த கதி குறித்த விபரங்களை வெளி உலகத்திற்குக் கொண்டு வந்தமை தொடர்பாக, தான் ஸ்ரீலங்காப் படையினரால் விசாரணை செய்யப்பட்டிருப்பதாகத் தினக்குரல் பத்திரிகையின் மன்னார்ச் செய்தியாளர்பஸ்மியன்தெரிவித்துள்ளார்.

இச் செய்தியினை கொழும்பு செய்தி ஊடகங்கள்வெளியிட்டுள்ளன.

விசாரணை செய்தது மட்டுமன்றி கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டிருப்பதாகவும் அப்பத்திரிகையாளர் மேலும் தெரிவித்துள்ளதாக அறியமுடிகிறது. [உ-7]

## ஹற்றன் சமவெளிப் பகுதியில் 10 ஆயிரம் ஆண்டுகள் பழமை வாய்ந்த விவசாய நிலம் இனம் காணப்பட்டது

[கொழும்பு]

இலங்கையில் ஹற்றன் சமவெளிப் பகுதியில் 10 ஆயிரம் ஆண்டுகள் பழமையான விவசாயம் செய்யப்பட்ட நிலம், ஆய்வுகள் மூலம் இனங் காணப் பட்டுள்ளது.

சுவீடன் நாட்டு நிறுவனம் ஒன்று தொல்லியலாளர்களை இணைத்து ஏழு வருடங்கள் மேற்கொண்ட ஆய்வில் இந்தப்புராதனவிவசாய நிலம் அடையாளம் காணப்பட்டுள்ளது;

இந்திய துணைக் கண்டம் இலங்கையுடன் இணைந்திருந்த லெமோரியாக் கண்டத்தில் மனிதர்கள் வாழ்ந்த எச்சமாக இருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகிறது.

(உ-5)

## இராசி பலன்

8 4 2001
(பங்குனி,26 ஞாயிறு)
பூரணைமுப 9.34வரை
அத்தம் காலை 7 25
ராகுகாலம் 4 37-6.07
சுபநேரம 9 07-10 37
அமிர்த சித்தம்

**மேடம்**

புதிய முயற்சி, சத்துரு ஜெயம், முயற்சி கைகூடும், திடீர் பயணம்.

**இடபம்**

வியாபார மேன்மை, காரிய இடையூறு, உத்தியோக நன்மை, புத்திரரால் கவலை,

**மிதுனம்**

பயந்த சுபாவம், அற்பர் உறவு, உறவினர் மனஸ்தாபம், திடீர்நன்மை,

**கடகம்**

இனிய சம்பவம், தனவரவு, வாக்குமேன்மை, பிரயாணம,

**சிங்கம்**

தனவிரயம், காரிய தாமதம், அதிகாரிகள் வெறுப்பு, விவாதம்.

**கன்னி**

கற்பனைமிகுதி, சயனசுகம், ஜனவசியம, முயற்சிகைகூடும்,

**துலாம்**

தன விரயம், உணர்ச்சிவசப்படல, அலைச்சல, சயனசுகக் குறைவு.

**விருச்சிகம்**

நல்லமாற்றம், தனலாபம், கீர்த்தி, காரியம் கைகூடும.

**தனுசு**

நல்ல செய்தி, உத்தியோகச் சிறப்பு, பணியாளா உதவி, அதிகாரம.

**மகரம**

புதிய திட்டமிடல், சகோதரர் உதவி, கட்டுப்பாடு, பிரயாணம.

**கும்பம்**

எதிர்பாராத அச்சம், வீண் தொல்லை, உடல் சோர்வு, காரியத்தடங்கல்.

**மீனம்**

களஸ்திரசுகம், பிரயாணம், பேரின சுகம், காரிய நன்மை.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)

வளவன்

## உளநலம் குன்றியோர்க்கு உதவ நிதி சேகரிப்பு

(யாழ்ப்பாணம்)

உலகசுகாதாரத்தினமான நேற்று, உளநல சங்கத்துடன் இணைந்து தமிழர் புனர்வாழ்வு நிறுவனம் ஏற்பாடு செய்த உளநலம் குன்றியோருக்கு உதவும் முகமான விழிப்புணர்வு திகழ்வுகள் தமிழர்புனர்வாழ்வு நிறுவனத் தலைவர் அ நல்லதம்பி தலைமையில் நிறுவன மண்டபத்தில் நடைபெற்றன.

உளநலம் குன்றியோருக்கு உதவும் முகமாக தமிழர் புனர்வாழ்வு நிறுவன மாணவர்களால் இம்மாதம் 11 ஆம் திகதி வரை கொடிவார நிதி சேகரிப்பு நடவடிக்கை நடைபெற உள்ளதாகவும் அந்த மாணவர்களுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறும்தமிழர் புனர்வாழ்வு நிறுவனத்தினர் இந்நிகழ்வில் வேண்டுகோள் விடுத்தனர். (உ-6)

## இன்று தீர்த்தம்

கச்சேரி நல்லூர் வீதி பாணங்குளம் நாகசிஅம்மன் தேவஸ்தான தீர்த்தத் திருவிழா இன்று காலை 8 00 மணிக்கு இடம்பெறவுள்ளது.

[உ-106]

## க.பொ.த. உயர்தர மாணவர்க்கான உயிரியல் பாட விடைகள்

### ஆசிரியர். கே. சுகந்தன் B.SC

வினா இல - 06

**வினா-1**

01) அ) 1) முதுகுப் புற குழாயுருவான நரம்புநாண்
2) முதுகுப் புறமான திண்மமான முதுகுநாண்
3) தொண்டைப் பூப்பிளவு
4) வயிற்றுப்புற இதயம்
5) குதப்பிற்புறவால்

ஆ) பூப்பிளவுகள் காணப்படல்
செட்டைகள் காணப்படல்
பக்கக் கோட்டுப் புலனங்கம் காணப்படல்

இ) அவயவங்கள் காணப்படல்
சுவாசப்பை காணப்படல்

ஈ) வால் இழுக்கப்பட்டது

உ) Aves இல்
a) இறக்கைகள் உண்டு
b) அலகு உண்டு
c) பற்கள் இல்லை
d) முன்னவயம் செட்டைகளாகக் காணப்படும்

Reptilia இல்
a) இறக்கைகள் இல்லை
b) அலகு இல்லை
c) பற்கள் உண்டு
d) செட்டைகள் இல்லை

ஊ) செதில் காணப்படல்

எ) மயிர் உண்டு
முலைச்சுரப்பி உண்டு
கீழ்த்தாடை தனியான பல்லென்பால் ஆக்கப்பட்டிருத்தல்

**வினா-2**

A) 1) பாறைக் கடலோரம்
2) A—பாறைகளின் மேற்புறம்
B—பாறைகளின் கீழ்
C—மண்ணில்/கடற்சாதாளைகளுக்கிடையில்
D—பாறைகளின் மேல்/மண்ணின் மேல்
E பாறைகளின் மேல்/மண்ணின் மேல்
3) A
4) E

B) 1) A—பலதட்டுக்களைக் கொண்ட ஓடு
B—ஒடுக்கப்பட்ட வயிற்றறை/நெஞ்சறையின் கீழ் மடிந்து காணப்படும் தட்டையான பரிசை மூடி
C—பராபாதம்
D—5 புயங்கள்
E—பரிசக் கொம்புகள்

C) 1) நடக்கும் கால்கள்
2) பராபாதம்

D) 1) Annelida
2) Arthropoda

(அடுத்த சனிக்கிழமை தொடரும்)

---

### உடுவில் பிர. செயலர் பிரிவில்

## ஜி.ரி. சற் நிறுவன உதவியுடன் 70 வீடுகள் அமைக்கும்திட்டம் அமுல்

(யாழ்ப்பாணம்)

உடுவில் பிரதேச செயலர் பிரிவின் கீழ் உள்ள 70 குடும்பங்களுக்கு ஜிரி சற் நிறுவனத்தின் நிதி உதவியுடன் வீடுகள் கட்டிக் கொடுக்கப்படவுள்ளன.

இதற்கென தாவடி, உடுவில், கந்தரோடை ஆகிய பகுதிகளில் உள்ள 5 கிராம சேவகர் பிரிவுகளில் இருந்து வறுமைக் கோட்டின் கீழ் வாழும் 70 பயனாளிகள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கு சுமார் ஒரு இலட்சம் ரூபா செலவில் மிக விரைவில் வீடுகள் கட்டிக் கொடுக்கப்படவுள்ளதாகவும் இப் பயனாளிகள் பற்றிய அறிமுக விழாவும், வீடுகள் கட்டுவது பற்றிய வழிமுறைகள் பற்றியும், கடந்த 5 ஆம் திகதி உடுவில் பதில் பிரதேச செயலர் கே. கேதீஸ்வரன் தலைமையில் ஜி ரி. சற் நிறுவன அதிகாரிகளினால் பிரதேச செயலக மகாநாட்டு மண்டபத்தில் முழு நாள் கருத்தரங்கொன்று நடைபெற்றதாக உடுவில் பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் அ. ஜெயப்பிரகாசம் தெரிவித்தார்.

இந்த வீட்டுத் திட்டத்தில் விதவைகளைக் குடும்பத் தலைவர்களாகக் கொண்டவர்களுக்குமுன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (உ-2)

## இளைஞனை தாக்கிய காளை

(மந்திகை)

கட்டிவைத்த காளை மாட்டை அவிழ்க்கச் சென்ற எஜமான், காளையால் மூர்க்கத் தனமாக தாக்கப்பட்டு படுகாயமடைந்த நிலையில் பருத்தித்துறை அரசினர் ஆதாரவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

காளையினை வண்டிலில் பூட்டுவதற்காக அவிழ்த்த சமயமே இச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

கடடைவேலி யாக்கருவைச் சேர்ந்த நடராசா ரவிச்சந்திரன் [வயது 23] என்பவரே படுகாயமடைந்து வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார். [உ-23]

## வர்த்தக நிலையங்களில் பணிபுரிந்த 653 பேர் தொழில்கள் இழப்பு

(தென்மராட்சி]

சாவகச்சேரி நவீனசந்தைக் கட்டடத் தொகுதியில் இருந்த வர்த்தக நிலையங்களில் பல்வேறு தரங்களிலும் பணிபுரிந்த 653 பேர் வர்த்தக நிலையங்கள் அழிக்கப்பட்டதால், பாதிக்கப்பட்ட நிலையில் இருப்பதாக திரட்டிய புள்ளி விபரங்கள் மூலம் அறியவந்துள்ளது.

கடந்த பதினொரு மாதங்களாக இவர்கள் எந்தவித தொழில் முயற்சியிலும் ஈடுபடாமல் இருப்பதால் பொருளாதார நெருக்கடிகளை எதிர்கொண்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது. (உ-77)

## ஸ்ரீமுருகன் ஐ. வி. க. வெற்றி பெற்றது

(யாழ்ப்பாணம்)

கடந்த 30 ஆம் திகதி நடைபெற்ற உடுவில் பிரதேச செயலக தடகள விளையாட்டுப் போட்டியில் மல்லாகம் ஸ்ரீ முருகன்ஐக்கியவிளையாட்டுக் கழகம் முதலாம் இடத்தைப் பெற்று அமரர் மகாலிங்கம் ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணத்தைத் தட்டிக் கொண்டது.

2 ஆம் இடத்தை இணுவில் இந்து விளையாட்டுக்கழகம் பெற்றுக் கொண்டது. (உ-2)

---

## செய்தித் துளிகள்

### இலைச் சுருட்டல்

(இணுவில்)

புன்னாலைக் கட்டுவன், குப்பிளான் பகுதி மிளகாய்ப் பயிர்களில் ஒருவித இலைச் சுருட்டல் நோய் காணப்படுகிறது.

இதனால் மிளகாய்ச் செடிகள் உரிய பலனைப் பெறுவதற்கு முன்னதாகவே அழிவடைந்து விடுவதாக பயிர்ச் செய்கையாளர்கள் தெரிவித்துள்ளனர். (உ-49)

### நீர்த்தாங்கி திறப்புவிழா

(ஏழாலை)

யாழ். மல்லாகம் கனிஷ்ட வித்தியாலயத்தில் புதிதாக அமைக்கப்பட்ட நீர்த்தாங்கி, பெயர்ப்பலகை என்பவற்றின் திறப்பு விழா வித்தியாலய அதிபர் செல்வி சி.கெங்காமலர்தேவி தலைமையில் கடந்த வெள்ளிக்கிழமை காலை 9.00மணிக்கு இடம்பெற்றது.

நீர்த்தாங்கியை சிவத்தமிழ்ச் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டியும், பெயர்ப் பலகையைமல்லாகம் கனிஷ்ட வித்தியாலயத்தின் ஓய்வு பெற்ற ஆசிரியை திருமதி செ. நடராசாவும் திறந்து வைத்தனர்.

இத் திறப்பு விழா நிகழ்வுக்கு சிறப்பு விருந்தினராக தெல்லிப்பழைக் கல்விக் கோட்ட உதவிக்கல்விப்பணிப் பாளர்ஆ:வ: கணேசலிங்கம் கலந்துகொண்டார். (உ-12)

### வி.மைதானம் அமைக்க உதவி

(இணுவில்)

உடுவில் மான்ஸ் த: க: பாடசாலைக்கு விளையாட்டு மைதானம் அமைக்கத்தேவையான காணியை இவ்வருடத்திற்குள் கொள்வனவு செய்து வழங்க விருப்பதாக, அண்மையில் இடம்பெற்ற அப்பாடசாலை விளையாட்டுப் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட வலிகாமம் தெற்கு பிரதேச சபைத் தலைவர்கமலசபேசன் தெரிவித்துள்ளார்.

(உ-49)

### பாவனையாளர் விசனம்

(தென்மராட்சி)

யாழ்ப்பாண மாவட்டத்தில் இலங்கை மின்சார சபையினால் வழங்கப்பட்டுவரும் மின் விநியோகத்தில் அடிக்கடி ஏற்படும் மின் கோளாறு மற்றும் மின்வெட்டுக்கள் குறித்து மின் பாவனையாளர்கள் மத்தியில் பெரும்அதிருப்தியும் விசனமும் வெளிப்படுத்தப்பட்டு வருகின்றது.

குறிப்பாக இரவு வேளைகளில் ஒன்றைவிட்டு ஒருநாள் மின்வெட்டு அமுல் செய்யப்பட்டு வருவதனால் மாணவர்களின் கல்வி பெரிதும் பாதிக்கப்பட்டுவருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (உ - 77)

### பரவசமூட்டிய காவடியாட்டம்

(யாழ்ப்பாணம்)

இணுவில் கிழக்கு சிவகாமி அம்மன் கோவில் சப்பறத் திருவிழாவை ஒட்டி, நூற்றுக் கணக்கான பக்தர்கள், மருதனார்மடம் சந்தை வைரவர் ஆலயத்தில் இருந்து தமது நேர்த்திக் கடன்களைச் செலுத்தும் வகையில் காவடி எடுத்த காட்சி பார்ப்போர் மனதைப் பக்திப் பரவசத்திற்குள்ளாக்கியது.

இக் காவடி எடுத்தவர்கள் 8வயது தொடக்கம் 70 வயது வரையானவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. [உ]

### மண்டலா அபிஷேகம்

[யாழ்ப்பாணம்]

உடுவில் மல்வம் அருள் மிகு இராஜேஸ்வரிஅம்பாள் ஆலய மண்டலாபிஷேகம், கடந்த 6 ஆம் திகதி ஆரம்பமான புனருத்தாரண அஷ்ட பந்தன மகா கும்பாபிஷேகத்தைத்தொடர்ந்து 22 நாட்கள் நடைபெற்றுவருகிறது.

இறுதி நிகழ்வாக எதிர் வரும் 29 ஆம் திகதி அஷ்டோத்தர சங்காபிஷேகமும் நடைபெறவுள்ளது. (உ-2)

### தற்கொலை முயற்சி

[மந்துவில்]

குடும்பத்தகராறு காரணமாக தன்னைத்தானே தீமூட்டித் தற்கொலை செய்ய முயன்ற 5 பிள்ளைகளின் தாயான குடும்பப்பெண் ஒருவர் பலத்த எரிகாயங்களுடன் மந்திகை வைத்திய சாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளார். (உ-39)

### வயோதிபர் நலமாக வீடு திரும்பினார்

(தென்மராட்சி)

கரணவாயில் இருந்து மட்டுவில் மானாவளைப் பகுதியில்இருக்கும் தமது வீட்டைப் பார்வையிடச் சென்று வீடு திரும்பவில்லை என அறிவிக்கப்பட்ட வயோதிபரான சின்னத்துரை, நான்குநாட்களின் பின் நலமாக வீடு திரும்பியுள்ளார். (உ-77)

### விரைவில் நிவாரணம்

(ஆவரங்கால்)

பங்குனி மாதத்திற்கான உலர் உணவு நிவாரணம் வழங்கும் ஏற்பாடுகள் இடம் பெற்று வருவதாகவும்,

சித்திரைப் புத்தாண்டுக் கிடையில் பழைய பட்டியலின்படி அவை வழங்கப்பட்டு விடும் எனவும் கோப்பாய் பிரதேச செயலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

(உ-57)

### மாதாந்தக் கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்ட மக்கள் நலன்புரிச்சங்கத்தின் சகல தொண்டர்களுக்கான மாதாந்தக் கலந்துரையாடல் இன்று பி.ப.3.30 மணிக்கு கொக்குவில் அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

மேற்படி கலந்துரையாடலில் பயிற்சிப் பாசறை, அடையாளஅட்டை வழங்கல் தொடர்பாக ஆராயப்படவுள்ளதால் தொண்டர்களை தவறாது கலந்து கொள்ளுமாறு சங்கப் பொறுப்பாசிரியர் கேட்டுள்ளார். [உ-15]

### நீதிபதி உத்தரவு

(வவுனியா)

கைது செய்யப்பட்டு விசாரணைக்காகத் தடுத்து வைக்கப்பட்ட பல இளைஞர்கள் பொலிஸாரினாலும் இராணுவத்தினராலும் சித்திரவதைக் குள்ளாக்கப்பட்டமை தொடர்பாக வவுனியா மாவட்ட நீதிபதியின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

இதனையடுத்து எதிர்வரும் 24 ஆம் திகதி 211 ஆம் படைப்பிரிவின் மேஜர் தரத்திலான ஒருவரை நீதிமன்றத்திற்கு சமுகமளித்து விளக்கமளிக்குமாறு நீதிபதி உத்தரவிட்டுள்ளார். (உ-5)

## இன்று ஒரு தகவல்

# விலை கேட்டது எதற்காக?

கடலூரில் கன்னையன் என்பவன் பழம் பொருட்களை வாங்கி அதன் மீது இலாபம் வைத்து விற்றுவந்தான். அதில் நல்ல இலாபம் கிடைத்தது ஒரு நாள் அவன் தன் கடையில் உட்கார்ந்து வந்த சிலரைக் கவனித்துக் கொண்டிருந்த போது, சோமன் ஒரு பழங் கம்பளிப்போர்வையைச் சுற்றி எடுத்துக் கொண்டு வந்தான். அவன் கன்னையனிடம் புதுக்கம்பளிப் போர்வை விலை என்ன? என்று கேட்டான். கன்னையனும் நான் புதுப் பொருளாக எதையும் வாங்கிவிற்பதில்லை, எல்லாம் பழைய பொருட்கள் தான் என்றான்.

சோமனும் 'அது தெரியும் ஆனால் பழம் பொருட்களை நீ வாங்கும் போது முதலில் புதிய பொருளின் விலையில் ஒரு பகுதி தானே கொடுப்பாய். அதனால் எந்தப் புதிய பொருளின் விலையும் உனக்குத் தெரிந்திருக்குமே' என்றான். கன்னையனும் 'ஆமாம் புதிய பொருளின் விலையில் கால் விலைக்குத் தான் நான் பழம் பொருளை வாங்குவேன். அதற்கு மேல் ஒரு ரூபாய் இலாபம் வைத்து விற்பேன். உன்னிடம் உள்ளது பழைய கம்பிளி இதுவே புதிதாக இருந்தால் இருபது ரூபாய்பெறும். உன்கம்பளிக்கு ஐந்து ரூபாவுக்கு மேல்கிடைக்காது' என்றான்.

சோமனும் கம்பளியைக் காட்டி 'நன்றாகப்பார். முடிவான விலை சொல்' என்றான். எனவே கன்னையனும் 'இதன் நிறங்கூடமங்கி, இழைகள் பிரிந்து போயிருக்கின்றன. அதனால் நான்கு ரூபாய் தான் கொடுக்க முடியும். அடடே! ஓரிரண்டு சிறுபொத்தல் கூட இருக்கிறதே முடிவாகச் சொல்கிறேன் இது மூன்று ரூபாய் தான் பெறும். சம்மதமா?' என்று கேட்டான்.

சோமனும் கூடியிருந்தவர்களிடம் 'பார்த்தீர்களா! இதன் விலை மூன்று ரூபாய் என்று சொல்லி விட்டார் கடைக்காரர். எனக்கும் சம்மதமே இந்தாருங்கள் மூன்று ரூபாய் எனக்கூறிக்கம்பளியை எடுத்துக் கொண்டு மூன்று ரூபாய்களைக் கொடுத்தான். கன்னையன் திகைத்துப்போய் 'இதென்ன! நான் பணத்தைக் கொடுக்க வேண்டும்' நீ கம்பளியை எனக்குக் கொடுக்க வேண்டும் அதற்குப் பதிலாக நீ பணத்தைக் கொடுத்து விட்டு உன் கம்பளியையே எடுத்துக் கொள்கிறாயே' என்று கேட்டான்.

சோமனும் 'இந்தக்கம்பளிப் போர்வை உன் கடைவாசலில் இருந்தது தான். அதை நான் எடுத்து வந்து இதன் உண்மை விலை என்ன என்று கேட்டேன் நீ மூன்று ரூபாய் என்றாய். அதனால் அந்த விலையைக்கொடுத்தேன்' என்றான் கடையில் கூடி இருந்தவர்களும் அவன் சொல்வது சரி தான் என்றனர். கன்னையனோ 'அதன் விலை பத்து ரூபாய் என்று குறித்து ஒரு சீட்டை கட்டியிருந்தேன்' அதைக்காணோமே 'எனவே சோமன் அது கம்பளியைஎடுக்கும் போது கீழே விழுந்துவிட்டது பத்திரமாக எடுத்து வைத்தேன்' எனக்கூறித் தன் சட்டைப்பையிலிருந்து அந்தச் சீட்டை எடுத்துக் கொடுத்தான். கன்னையன் என்ன செய்வான். பாவம்! சோமனுக்கு அந்தக் கம்பளியை மூன்று ரூபாய் என்ற விலைக்கே கொடுக்க வேண்டியதாயிற்று. சோமன் கம்பளி வாங்க வந்தானா அல்லது விற்க வந்தானா என்று கன்னையன் கேட்காமல்போனது அவன் தவறுதானே!.

நாரண கோவிந்தன்

# மூன்று இனத்தவரின் நம்பிக்கையை வென்றால் சமாதானம் ஏற்படும்

[கொழும்பு]

தமிழ், முஸ்லிம், சிங்கள மக்களின் நம்பிக்கையை வென்றால் மீண்டும் சமாதானம் ஏற்பட வாய்ப்புண்டு என ஜே.வி.பி கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் விமல்வீரவன்ச தெரிவித்துள்ளார்.

யாழ். நூலகத்தை ஐ.தே கட்சி தீக்கிரையாக்கியது. தமது அரசியல் லாபம் கருதி, தமிழ்மக்களின் இதயம் போன்ற பெறுமதிமிக்க நூலகத்தை எரித்தனர். இதன் மூலம் இந்த நாட்டில் இரத்த ஆறு ஓடியது.

தமிழ் மக்களின் உரிமைகளுக்கு உரிய இடம் அளிக்க ஆட்சியாளர்கள் தவறியதன் காரணமாக இன்று அதன் விளைவுகளை எதிர்நோக்கியுள்ளோம்.

ஒரு இனத்தின் உரிமைகளை அச்சமூகத்தின் தேவைகளை மதிக்கத் தவறியதன் காரணமாக சகலசமூக மக்களும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

நாட்டிலுள்ள பிரதான சமூகங்களின் அபிமானத்தை வென்றெடுப்பதற்கு அரசு முயலவில்லை சிங்கள, தமிழ், முஸ்லீம் மக்களின் அபிமானத்தை வென்றெடுப்பதற்கான முயற்சிகளில் அரசு தோற்றுவிட்டது.

இந்த இனங்களுக்கிடையே ஒற்றுமை நல்லெண்ணத்தை வளர்ப்பதற்கு அரசு முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். இவ்வாறு ஒற்றுமை நலலெண்ணத்தை வளர்க்க முடியாவிடில் சமாதானத்தை நிலை நாட்டுவது கஷ்டமானதாக இருக்கும்.

என்று விமல்வீரவன்ச மேலும் கூறியுள்ளார். (செ)

# அகில உலக றோட்டறிக் கழக மாவட்ட ஆளுநர் விரைவில் யாழ். விஜயம்

அகில உலக றோட்டறிக் கழகத்தின் இலங்கைக்கான மாவட்ட ஆளுநர் றோட்டேறியன் கிறிஸ் இராஜேந்ரன் மூன்று நாள் உத்தியோகபூர்வ விஜய மொன்றினை மேற் கொண்டு இம் மாதம் யாழ்ப்பாணம் வரவுள்ளார்.

இவரது விஜயத்தின் போது யாழ். மாவட்டத்தில் பின்தங்கிய பாடசாலை மாணவர்களின் நன்மை கருதி நடமாடும் கணனிப் பயிற்சிச் சேவை நிலையம் ஒன்று ஆரம்பித்துவைக்கப்படும்.

அத்துடன் இத் திட்டத்துக்கென அகில உலக றோட்டறிக் கழகத்தின் சார்பாக ஐந்து கணணிகளும் அன்பளிப்புச் செய்யப்படவுள்ளதாக யாழ். றோட்டறிக் கழகத்தின் தலைவர் அ.பஞ்சலிங்கம் தெரிவித்தார்.

நீராவியடியிலுள்ள சைவ பரிபாலன சபையில் யாழ். றோட்டறிக் கழகத்தினால் நிர்மாணிக்கப்பட்ட சிறுவர்களுக்கானபொதுப்பூங்காவையும் றோட்டறியின் மாவட்ட ஆளுநர் திறந்துவைப்பார் எனவும் அறியப்படுகின்றது. (உ-77)

# விவசாயிகளுக்குத் தேவையான விதை நெல் கொள்வனவு

## கமநல திணைக்களம் நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட விவசாயிகளுக்குத் தேவையான 2001/2002 பெரும் போகத்திற்கான விதை நெல் இனங்களை கொள்வனவு செய்ய யாழ். மாவட்ட கமநலஅபிவிருத்தித் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

யாழ். மாவட்டத்தில் 2000/2001 பெரும் போகத்தில் 5 ஆயிரத்து 467 ஹெக்ரேயரில் நெற் செய்கை பண்ணப்பட்ட போதிலும்,

ஆயிரத்து 618 ஹெக்ரேயர் வரட்சி காரணமாகவும், 113 ஹெக்ரேயர் கால் நடைகளாலும் அழிந்து நாசமாகியதுடன்.

எஞ்சிய மூவாயிரத்து 754 ஹெக்ரேயரில் பருவ மழையின்றி உரிய விளைச்சல் இன்மையால் விதை நெல்லுக்குப் பயன்படுத்த முடியாத நிலை எழுந்திருப்பதைத் தொடர்ந்தே வெளியாவட்டங்களில் இருந்து நல்லின நெல் விதைகளை கொள்வனவு செய்து வழங்க வேண்டிய தேவை எழுந்துள்ளதாகவும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

விதைநெல் தேவையுடையோர் தத்தம் விவசாய சம்மேளனங்களினூடாக பதிவு செய்து இம் மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பங்களை அனுப்பி வைக்குமாறும், ஒரு புசலுக்கான கட்டணம் 200 ரூபா எனவும் யாழ். மாவட்டக் கமநல அபிவிருத்தித்திணைக்கள உதவி ஆணையாளர் க சுந்தரரேசன் தெரிவித்துள்ளார். (உ-6)

## இன்று தீர்த்தம்

(அரியாலை)

அல்வாய் வடக்கு வியாபாரி மூலை அருள்மிகு ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் சமேத வீரபத்திரர் ஆலய தீர்த்த உற்சவம் இன்று காலை 8 மணிக்கு இடம் பெறவுள்ளது. [உ-106]

## என். சிவராஜா தலைவராகத் தெரிவு

(தென்மராட்சி)

யாழ்ப்பாணம் விஞ்ஞானச் சங்கத்தின் பத்தாவது தலைவராக யாழ். பல்கலைக் கழகத்தின் சமூக மருத்துவத் துறையைச் சேர்ந்த வைத்தியக் கலாநிதி என். சிவராஜா தெரிவுசெய்யப்பட்டுள்ளார். [உ-77]

## ஷெல் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

அரியாலைப்பகுதியில்நிலை கொண்டுள்ள இராணுவத்தினர் நேற்றுமுன்தினம்மாலை ஷெல் தாக்குதலில் ஈடுபட்டிருந்தனர்.

கிழக்கரியாலை கல்முனைப் பகுதிகளில் ஷெல் விழுந்ததாகவும் இதன்போது ஏற்பட்ட சேதவிபரங்கள் தெரியவில்லைஎன்றும் தெரிவிக்கப் படுகிறது. (ம.110)

## அம்மனின் நகை சூறை

(தென்மராட்சி)

சாவகச்சேரி துர்க்கை அம்மன் தேவஸ்தானத்தில் இருந்தசுமார் 25 பவுண் தங்க நகைகள், ஒலிபெருக்கிசாதனம், மின்பிறப்பாக்கிமற்றும் ஆலயப்பொருட்கள் யாவும் காணாமல் போயுள்ளதாக தெரிவிக்கப் பட்டுள்ளது.

தேவஸ்தானத்தின் முன் பக்கம் எறிகணை வீச்சினால் பாதிக்கப்பட்டிருப்ப தாகவும் தெரியவந்துள்ளது. (உ-77)

## நடத்துநர் தவறி வீழ்ந்தார்

(யாழ்ப்பாணம)

கோண்டாவில் சாலைக்குச்சொந்தமான பஸ்வண்டி நடத்துநர் ஒருவர் பஸ்சிலிருந்து தவறி வீழ்ந்துகாயத்திற்குள்ளானார்.

இச்சம்பவம் நேற்று முன்தினம்பிற்பகல்பண்ணைத் தாம் போதிக்கருகில் நிகழ்ந்தது.

மிதிப்பலகையில் நின்ற போது முட்கம்பிக்குமேல் தவறிவிழுந்ததனால் படுகாயமுற்றநிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (வ)

# அரச காணிகளில் வசிப்பவர்களுக்கு உறுதி வழங்க நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

உடுவில் பிரதேச செயலர் பிரிவிற்கு உட்பட்ட சங்குவேலிதெற்கு ஜே/187 கிராம அலுவலர் பிரிவில் நீண்டகாலமாக அரச காணிகளில் வசித்து வருபவர்களுக்கு காணி உறுதிகள் வழங்கப்படவுள்ளன.

இதற்கான விசாரணைகள் எதிர்வரும் 16 ஆம் திகதி திங்கட்கிழமை மு.ப.10.00 மணியளவில் குடியேற்ற அதிகாரி திருமதி வீ சந்திரதேவாவினால் மேற்கொள்ளப்படவிருப்பதாக அப்பகுதிக்கிராம அலுவலர் பெனடிக்ற் ஜெபரட்ணம் அறிவித்துள்ளார்.

இதுதவிர, உடுவில் பிரதேச செயலர் பிரிவில் வேறு பகுதிகளிலும் இவ்வாறு காணி உறுதி வழங்குவது தொடர்பான விசாரணைகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை மேற்படி பகுதி மக்கள் நீண்ட காலமாக அரச காணிகளில் வசித்து வருகின்ற போதிலும் அவர்களுக்கான காணி உறுதிகள் வழங்கப்படாமையினால் பொது நிறுவனங்கள் மற்றும் தொண்டு நிறுவனங்களின் உதவிகளை அவர்கள் பெற்றுக் கொள்வதில் சிரமங்கள் அனுபவித்து வருகின்றமை குறித்து கடந்த மாதம் 25 ஆம் திகதி வலம்புரிப்பத்திரிகையில் சுட்டிக்காட்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (உ-2)

# கைவிட்டு வந்த பொருட்களைக் களவாடும் கும்பல்கள் அதிகரிப்பு

(தென்மராட்சி)

பாதுகாப்புப் படையினரின் அனுமதியின்றி தென்மராட்சிப் பகுதியிலுள்ள மட்டுவில் வடக்கு, மட்டுவில் தெற்குப் பகுதிகளுக்கு நீர்வேலி தரைப் பாதை வழியாகச் செல்லும் திருடர்கள் வீட்டுச் சொந்தக்காரர்களினால் கைவிடப்பட்டு வந்த பொருட்களைத் திருடிவருவது தொடர்வதாக பாதிக்கப்படும் மக்களால் புகார் தெரிவிக்கப்படுகிறது.

இத் திருட்டுக் கும்பலில் சில பெண்களும் இணைந்திருப்பதாகவும் தெரியவருகின்றது. இத்தகைய திருட்டுச் சம்பவங்கள் பற்றி மேற்படி பகுதிகளைச் சேர்ந்த மக்கள் அரச அதிகாரிகளிடம் முறைப்பாடு செய்துள்ளதாகவும் அறியப்படுகின்றது. (உ-77)

# இலவச மருத்துவமுகாமும் கண் பரிசோதனையும்

(யாழ்ப்பாணம்)

இன்று காலை 9 மணிக்கு கொக்குவில் லயன்ஸ்கழகத்தினரால் நந்தாவில் மனோன்மணி சனசமூக நிலையத்தில் இலவச மருத்துவ முகாமும் கண் பரிசோதனையும் நடத்தப்படவுள்ளன.

பொதுமருத்துவ பரிசோதனை, இலவச மருந்து விநியோகம், எஸ்.எம பெர்ணாண்டோ தாபனத்தால் பார்வைக் குறைபாடு வறுமைக் கோட்டின் கீழ் வாழ்பவர்களுக்கு இலவச மூக்குகண்ணாடி வழங்கல் என்பன அன்றைய தினம் இடம்பெறவுள்ளன (உ)

# எம்.பி. களின் முறைகேட்டால் பாராளுமன்றத்தை மக்கள் தாக்கலாம்

(கொழும்பு)

பாராளுமன்ற உறுப்பினர்கள் அநாகரிகமான முறையில் நடந்துகொண்டால் பாராளுமன்றத்தை பொது மக்கள் சூழ்ந்து தாக்கலாம் என்று நகர அபிவிருத்தி நிர்மாணத் துறை அமைச்சர் சபையில் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

கடந்த வியாழக்கிழமை மாலை ஆளுங்கட்சி, எதிர்க் கட்சி உறுப்பினர்கள் அநாகரிகமான முறையில் மோசமான வார்த்தைப் பிரயோகங்களை மேற்கொண்டனர்.

இவ்வாறு தரக்குறைவாக நடந்து கொள்ளும் உறுப்பினர்களை அங்கொடைக்கு அல்லது சிறிகாதாவிற்கு அனுபப வேண்டும.

பொது மக்கள் பணத்திலேயே பாராளுமன்றம் இயங்குகின்றது என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

அத்துடன் அநாகரிகமான முறையில் நடந்து கொள்ளும் உறுப்பினர்களுக்கு சபாநாயகர் அதிக தண்டனை வழங்க வேண்டும்.

இவ்வாறு அமைச்சர் மேலும் கூறினார். [செ]

# பாக். முன்னாள் பிரதமர் பூட்டோ மீதான சிறைத்தண்டனை இரத்து

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானின் முன்னாள் பிரதமமந்திரி பெனாஸிர்பூட்டோமீதும் அவரது கணவர் மீதும் ஊழல்குற்றச்சாட்டு தொடர்பாக விதிக்கப்பட்டிருந்த ஐந்து ஆண்டு சிறைத் தண்டனையை உயர்நீதிமன்றம் இரத்து செய்துள்ளது.

திருமதி பெனாஸிர் பூட்டோ பிரித்தானியாவிலும் அவரது கணவர் சிறையிலும் இருப்பது குறிப்பிடத்தக்கது.

பாகிஸ்தான் உச்சநீதிமன்றம் இத்தீர்ப்பை வழங்கிய போதிலும் மீண்டும் வழக்குத் தொடரப்படும் என்று தெரிவித்தது.

பெனாஸிர் பூட்டோநாடு திரும்பி அரசியலில் ஈடுபட முற்படலாமென்றும் அதே வேளை அவருக்கு வழக்குகள் இருப்பதால் உயிருக்கே ஆபத்தான காலமாக இருக்கலாமென்றும் அரசியல் அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை; திருமதி பெனாஸிர் பூட்டோ எப்பொழுது பாக். வருவார் என்று தெரிவிக்கப்படவில்லை இருந்தபோதும் பெனாஸிர் பூட்டோவோ முன்னாள் நவாஷ்ஷெரிப்போ.நாடு திரும்புவதையோ அரசியலில் ஈடுபடுவதையோ ஜெனரல் பர்வேஸ்முஷாரப் விரும்பவில்லையென்பதை அடிக்கடி கோடுகாட்டி வருகிறார்.(து)

## ஜிகாத் அமைப்பின் முக்கியஸ்தர் மரணம்

(ஜெருசலேம்)

மத்திய கிழக்கில் இஸ்ரேலுக்கும் பலஸ்தீனத்திற்கும் இடையேயான மோதல்களில் ஜிகாத் அமைப்பின் தலைவர்களில் ஒருவர்கொல்லப்பட்டிருப்பதாகவும்,

பலஸ்தீனப் பொலிபஸ் நிலையம் ஒன்று முற்றாகத் தாக்கி அழிக்கப்பட்டிருப்பதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-7)

## அமெரிக்க அதிபர் புஷ் ஜஸ்வந்சிங் சந்திப்பு

### இந்தியா வருமாறு அழைப்பு

(வாஷிங்டன்)

அமெரிக்க அதிபர் ஜோர்ச் டபிள்யு புஷ்சை திட்டமிட்டிராத சந்திப் பொன்றில் இநதியவெளிவிவகார அமைச்சர் சந்தித்துள்ளார்.

வெள்ளை மாளிகையில் நடைபெற்ற இச் சந்திப்பின் போது இருநாட்டு நிலைகள் பற்றி சிறிதுநேரம் உரையாடியுள்ளனர்.

சில நிமிட நேரம் இடம் பெற்ற இந்த உரையாடலில் இந்தியாவிற்கு வருமாறு புஷ்ஷிற்கு ஜஸ்வந்சிங் இந்தியா சார்பில் அழைப்புவிடுத்துள்ளார். [து]

## நேபாளத்தில் மோதல் 35 பொலிஸார் பலி

(காட்மண்டு)

நேபாளம் தலைநகர் காட்மண்டில் மாஓ கிளர்ச்சியாளர்கள் தாக்கியதில்.35 பொலிஸார் கொல்லப்பட்டுள்ளனர்.

கடந்த வெள்ளிக்கிழமை இரவுஇடம்பெற்ற இச்சம்பவத்தில் இன்னும் சில சடலங்கள்கட்டட இடிபாடுகளில் சிக்கிஇருக்கலாம் என நம்பப்படுகிறது. [உ-7]

### உலக தரிசனம்

## புதுச்சேரி வேட்பாளர் பட்டியல் 16 ஆம் திகதி பா.ம.க. வெளியிடும்

[சென்னை]

துவைச் சட்டசபைக்கான தனது வேட்பாளர்களை, பாட்டாளி மக்கள் கட்சிவரும் பதினாறாந் திகதி அறிவிக்குமென இதன் நிறுவனத்தலைவர் டாக்டர் ராமதாஸ் அறிவித்துள்ளார்.

பாண்டிச் சேரியில் தமது கட்சி பத்துத் தொகுதிகளில் போட்டியிடுமென்றும்; இது தொடர்பாக மறு பேச்சுக்கே இடமில்லையென்றும் விட்டுக் கொடுக்கமுடியாதென்றும் அவர் கூறியுள்ளார்.

காங்கிரஸ் எங்களுடன் கூட்டுச்சேராவிட்டால்அ.இ.அ.தி.மு.க. வுடன்பேசஇருப்பதாகவும் டாக்டர் ராமதாஸ் தெரிவித்திருக்கிறார். [து]

## வீட்டுக்காவலில் உள்ள ஆங்ஷாங் சூஷியை ஐ.நா.அதிகாரி சந்திப்பு

[ரங்கூன்]

ஐக்கிய நாடுகள் சபையின் மனிதஉரிமைகளுக்கான அதிகாரி, வீட்டுக்காவலில் வைக்கப்பட்ட பர்மாவின் பொதுக் கட்சித்தலைவர் ஆங்ஷாங் சூஷியை சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்:

ஒன்பது மணித்தியாலங்கள் நீடித்த இப்பேச்சுவார்த்தையில் என்னென்ன விடயங்கள் குறித்து ஐ நா.தூதர் பேச்சு நடத்தினார் என்பது இதுவரை வெளியிடப்படவில்லை. (உ.9)

# அரசை பதவி விலகக் கோரி வேலை நிறுத்தப் போராட்டம்

## இயல்புப் பணிகள் பாதிப்பு

(டாக்கா)

பங்களாதேஷில் தேர்தலை விரைவாக நடத்தக் கோரியும் ஆட்சியை கலைக்கக் கோரியும் எதிர்க்கட்சிகள் நடத்திவரும் வேலை நிறுத்த ஆர்ப்பாட்டம் தொடர்ந்தும் நடைபெற்று வருகிறது.

கடந்த ஞாயிறன்று ஆரம்பித்த இந்த ஆர்ப்பாட்டத்தினால் பங்களா தேஷில் வழமையான செயற்பாடுகள் ஸ்தம்பிதம் அடைந்துள்ளதாக அங்கிருந்துவரும் செய்திகள் கூறுகின்றன.

இதேவேளை, ஆர்ப்பாட்டக்காரர்களுக்கும் கலகம் அடக்கும் பொலிஸாருக்கும் இடை யேஏற்பட்ட மோதலில் 50 பேருக்கும்மேற்பட்டோர் காயமடைந்துள்ளதாகத் தெரிய வருகிறது.

மேற்படி ஆர்ப்பாட்டக்காரர்கள்கற்களாலும் உள்ளூர்த் தயாரிப்புக் குண்டுகளாலும் தாக்குதல் நடத்தியிருப்பதாக அங்கிருந்துவரும் செய்திகள் கூறுகின்றன. (உ-9)

## சர்வதேசரீதியில் அணு ஆயுதக் குறைப்பு இடம்பெற வேண்டும்

(புதுடில்லி(

சர்வதேசரீதியில் அணு ஆயுதக்குறைப்பு நிகழவேண்டும் என்று இந்தியப் பிரதமர் அடல் பிஹாரிவாஜ்பாய் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

உலக நாடுகள் எல்லாம் அணுவாயுத உற்பத்தியை நிறுத்தி அவற்றை அழித்துவிடுமாயின் இந்தியாவும் அணுவாயுதத்தை நிறுத்தும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

பகவான் மகா வீரனின் பிறந்த தினத்தை ஒட்டிநடைபெற்ற கூட்டத்தில் பேசுகையிலே இந்த வேண்டுகோளை விடுத்தார். (து)

## அகதி அந்தஸ்துக்கோரி ஆஸியில் ஆர்ப்பாட்டம்

(கன்பரா)

அவுஸ்திரேலியாவின் முகாம் ஒன்றில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 850 பேரில் 200 பேர் அகதி அந்தஸ்து கோரி ஆர்ப்பாட்டத்திலும் குழப்பங்களிலும் ஈடுபட்டுள்ளனர்.

சொத்துக்களை அழித்தும், எரித்தும் குழப்பம் விளைவித்த இவர்களின் செயலை கண்ணீர்ப்புகை பிரயோகித்து பொலிஸார் அடக்கியுள்ளனர்.

குழப்பத்தில் ஈடுபட்டவர்களில் பெரும்பாலானோர் மத்தியகிழக்கு நாட்டில் இருந்து சென்றவர்களாவர்,

அவுஸ்திரேலியாவின் தடுப்பு முகாம்களிலும். சிட்னி வீதிகளிலும் மேலும் இவ்வாறான ஆர்ப்பாட்டங்கள், குழப்பங்கள் இடம்பெறவுள்ளதாகஅகதிகள் ஆதரவுக் குழுக்கள் எச்சரித்துள்ளன. [உ-3[

## ஹரிக்கு காலில் பாதிப்பு

பிரித்தானிய இளவரசர் சாள்சின் இளைய மகன் ஹரி விபத்துக்குள்ளானார்.

நேற்று நடந்த விருந்தொன்றில் கலந்து கொள்வதற்காக சென்ற பொழுது, கண்ணாடிக்கதவுடன் மோதியதில் காலில் பாதிப்புஏற்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது,

இச்சம்பவத்தையடுத்து ஹரி ஊன்றுகோலின் உதவியுடன்நடப்பதாக அரண்மனை பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார். [து]

## காவியநாயகன் இறுதி அரங்கு

(யாழ்ப்பாணம்)

திருமறைக் கலாமன்றம் வழங்கும் தவக்கால ஆற்றுகை திருப்பாடுகளின் காட்சி 'காவியநாயகன், இன்று மாலை 7 மணிக்கு இறுதி நாளாக மன்ற அரங்கில் மேடையேறவுள்ளது. (உ-104)

### செய்திப்பரல்

- ★ நியூசிலாந்தின் மத்திய பகுதியில் ஒரு மணி நேர இடைவெளியில் 6 சிறிய பூகம்ப அதிர்ச்சிகள் ஏற்பட்டுள்ளன.
- ★ தமிழ் நாட்டில் சேலத்திலிருந்து சென்னை புறப்பட்ட பஸ் ஒன்று வேறொரு வாகனத்துடன் மோதித் தீப்பற்றி எரிந்ததில் 40 பேர் இறந்திருக்கலாம் என தெரிவிக்கப்படுகிறது.
- ★ சென்ற ஆண்டு ஆட்டிக் சமுத்திரத்தில் மூழ்கிய ஹோர்ஸ்க் என்ற ரஷ்ய நீர்மூழ்கியில் ஏவுகணை இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.
- ★ சீனவான்பரப்பில் மோதுண்ட அமெரிக்க சீன விமான விசாரணைகள் இன்னும் தொடர்கின்றன.
- ★ கென்யாவில் ஒன்றோடு ஒன்று மோதுண்டு 100 பயணிகளுடன் சபாகி நதியில் வீழ்ந்து மூழ்கிய இரு பஸ்களின் சிதைவுகள் மீட்கப்படுகின்றன; (உ-7)

## பத்திரிகையாளர் நிமலராஜன் கொலை வழக்கு விசாரணை விபரம் அறியத்தருமாறு ஜனாதிபதிக்குகடிதம்

### மீடியாவோஸ்டோக்அனுப்பிவைப்பு

படுகொலை செய்யப்பட்ட யாழ் பத்திரிகையாளர் மயில்வாகனம் நிமலராஜனின் கொலைவழக்குத் தொடர்பான விசாரணைகள் தற்பொழுது எந்த நிலையிலுள்ளது என்பது தொடர்பான முழு விபரங்களையும் தமக்கு அறியத்தருமாறு அமெரிக்காவைத் தளமாகக் கொண்டு இயங்கும் மீடியா போஸ்டோக், ஜனாதிபதி சந்திரிக்காவை கடிதம் மூலம் கேட்டுள்ளது.

ஜனாதிபதிக்கு அனுப்பப்பட்டுள்ள அக்கடிதத்தில் கடந்த வருடம் ஒக்டோபர் மாதம் 19 ஆம் திகதி ஊரடங்கு வேளை நிமலராஜன் படுகொலை செய்யப்பட்ட சமயம் அவரது வீட்டிற்கு அண்மையில் உள்ள காவலரண்களில் இருந்த படையினர் விசாரணைக்குட்படுத்தப்பட்டார்களாயின் அது தொடர்பான புலன் விசாரணைக்கு என்னென்ன நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்பதை தமக்கு அறியத்தருமாறு அக் கடிதத்தில் கேட்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதிக்கு அனுப்பப்பட்ட இக் கடிதத்தின் பிரதிகள் கொழும்பிலுள்ள சில வெளிநாட்டு தூதரகங்களுக்கும், சர்வதேச அமைப்புக்களுக்கும் அனுப்பிவைக்கப்பட்டிருப்பதாகவும் தெரியவந்துள்ளது. (உ-5)

## ஆனந்தநாயகிகாலமானார்

[புதுடில்லி]

காங்கிரஸ் கட்சியின் முன்னாள் சட்டசபை உறுப்பினர் ஆனந்தநாயகி தனது 75 வயதில்கடந்த புதன்கிழமை காலமானார்.

இவர்1952இல்தமிழகசட்டசபையில் காங்கிரஸ் கட்சியின் உறுப்பினரும்' இந்தியாவின் பிரபல சட்டத்தரணி என்பதும் குறிப்பிடத்தக்கது. (உ-7)

## புலிகள்மீதானதடையைநீக்க ஐரோ.பாராளுமன்றில் வழக்குத் தாக்கல்

[கொழும்பு]

விடுதலைப் புலிகள் மீது பிரிட்டன் தடைவிதித்தமையை நீக்கக் கோரி லண்டனில் இயங்கும்'தமிழர் தகவல் மையம்' மூன்று வழக்குகளை ஐரோப்பிய பாராளுமன்றில் தாக்கல் செய்யவுள்ளது;

இந்த வழக்குகள் வெவ்வேறு பெயர்களில் தாக்கல் செய்யப்படவுள்ளன;

ஆங்கில நிறுவனம் ஒன்றில் பணிபுரியும் சட்டத்தரணிகள் இதற்கான சகல ஏற்பாடுகளையும் மேற்கொண்டுள்ளதாக தெரியவருகின்றது. [செ]

தூங்குக தூங்கிச் செயற்பால தூங்கற்க
தூங்காது செய்யும் வினை
குறள்

# வலம்புரி

## சேடமிழுக்கும் திறந்த பல்கலை

யாழ்ப்பாணத்தில் இயங்கும் திறந்த பல்கலைக்கழகத்தின் ஆயுள் மிகவும் சொற்பமாகி விட்டது. தேசிய பல்கலைக் கழகங்களில் ஒன்றான திறந்த பல்கலைக்கழகம், பல்கலைக்கழகஅனுமதிகிடைக்காதவர்களும் பல்கலைக் கழக பட்டங்களைப் பெறும் வாய்ப்பை அளிப்பதற்காகத் தோற்றம் பெற்றது.

வழிகாட்டலுடன்கூடிய தேடலுக்கு வழிவகுத்து கல்வி ஆற்றலை விருத்தி செய்வதுடன் முகாமை, கல்வி, நிர்வாகம் எனப் பல்வேறு துறைகளிலும் பட்டப்படிப்புக்களை வழங்கிவருவதுதெரிந்ததே

ஆனால்யாழ். பிராந்திய திறந்த பல்கலைக் கழகத்தின் நிலை மிகவும் கவலைக்குரியது. ஏற்கனவே இருந்த கற்கை நெறிகள் பல்வேறு சாட்டுப்போக்குகள் கூறி ரத்துச் செய்யப்பட்டு விட்டது. இதுயாழ்ப்பாணத்து மாணவர்களுக்கு பெரும் பாதிப்பாகும்.

ஓர் பிராந்திய திறந்த பல்கலைக்கழகத்தில் புதிய புதிய கற்கை நெறிகளை அறிமுகப்படுத்துவதற்குப் பதிலாக அங்கிருக்கும் கற்கை நெறிகளையும் நிறுத்திவிடுவது இனவாதத்தின் ஓர்வெளிப்பாடு என்றே கருதவேண்டியுள்ளது.

தென்னிலங்கையிலுள்ள திறந்த பல்கலைக்கழகங்கள் தாராளமாகப்பட்டங்களை வழங்கவும் அதற்கேற்ப வேலை வாய்ப்பை அவர்கள் பெற்றுக்கொள்ளவும் வசதிகள், வாய்ப்புகள் செய்யப்பட்டிருக்கும் போது, யாழ்ப்பாணத்திலுள்ள திறந்த பல்கலைக் கழகத்தின் நிலை சேடமிழுப்பதாக இருப்பது ஏன் என்ற கேள்வியை எழுப்புவதற்கு யார் உளர்.

யாழ். திறந்தபல்கலைக் கழகத்திற்கென சிற்றூழியர்கள் இருந்த போதிலும் அதன் கட்டிடம் பற்றைக்குள் மூடி கிடப்பது அங்கு நடக்கும் நிர்வாகத்தின் சிறப்பை வெளிப்படுத்துகிறது.

தனித்துபதவிக்காக மட்டும் அக்கட்டிடத்தை தக்க வைப்பதை விடுத்து அதனை செம்மையாக இயங்கக் கூடிய நடவடிக்கைகளை மேற் கொள்ள வேண்டும்.

இல்லையேல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தரின் நேரடிக் கண்காணிப்பின் கீழ் திறந்த பல்கலைக் கழகத்தை கொண்டு வந்து தமிழ் மக்களுக்கு உதவ மக்கள் பிரதிநிதிகள் முன் வர வேண்டும்.

---

### பரமபிதா காட்டிய பாதை

# பார்ப்போரிடம் பரிவிரக்கமுண்டாக்கும்

# இயேசுவின் தெய்வீகத் 'திருப்பாடுகளின் காட்சி'



ஈழத்து தமிழ் நாடகப் பாரம்பரியத்தில் கிறிஸ்தவர்கள் மத்தியில் காணப்பட்ட சடங்கு நிலைப்பட்ட நாடக வடிவமாக 'திருப்பாடுகளின் காட்சி' (Passion Play) திகழுகின்றது. கத்தோலிக்கர்களினால் அறிமுகம் செய்யப்பட்ட கலை, இலக்கிய வடிவங்களில் இது முதன்மையானது எனலாம். கிறிஸ்துவின் பாடுகள் மரணம், உயிர்ப்பு என்பவற்றைத் தியானிக்கின்ற 'தவக்காலப் பகுதியில்' இதனை மேடையேற்றுதல் மரபாகும். கிறிஸ்துவின் துன்பகரமான பாடுகளும் மரணமும் தத்ருபமாகச் சித்திரிக்கப்படும் போது மனித பாவங்களே அவரை இவ்வாறு துன்புறுத்தின என்ற பரிவிரக்கம் பார்ப்போர் மனதில் பீறிட்டெழும். ஒரு வகையில் கிரேக்க தத்துவ ஞானி கூறுகின்ற 'கதாசிஸ்' என்னும் உணர்வு வெளிக்கொணர்கை அங்கு இடம் பெறும்: இதனால் தவக்காலத்தின் இலக்கு இலகுவாக எய்தப்படும். அதனாலேயே உலகளாவிய ரீதியில் கிறிஸ்தவர்கள் இதனை நிகழ்த்தி வருகின்றனர்.

### பழைய பாரம்பரியம்

இவ்வடிவமானது மத்திய காலப் பகுதியில் ஐரோப்பாவில் 'மறை பொருள்' நாடகங்களினடியாகத் தோன்றியது. இன்று இவ்வடிவத்தை மிகச் சிறப்பாக மேற்கொள்ளும் இடங்களில் ஜேர்மனியிலுள்ள 'ஒ பரமகௌம' என்னும் கிராமம் குறிப்பிடத்தக்கது. பத்து வருடத்துக்கொருமுறை முழுக்கிராமமும் இரண்டு இக்காட்சியை நிகழ்த்தும். தொன்மை மிக்க பாரம்பரியம் அங்குண்டு. இலங்கையில் தமிழ் மக்கள் மத்தியிலும் சிங்கள மக்கள் மத்தியிலும் இவ்வடிவத்தை மேடையேற்றும் பாரம்பரியம் இன்றும் காணப்படுகின்றது. ஆரம்பத்திலிங்கு பொம்மைகளைக் கொண்டு (நூல் பொம்மைகள்) இக்காட்சியை நிகழ்த்தும் பாரம்பரியம் காணப்பட்டது. இதனை 'உடலுக்குப் பாஸ்' என அழைப்பர். பிற்பட்ட காலத்திலேயே மனிதர்கள் நடிக்கின்ற நாடக மரபு ஏற்றுக்கொள்ளப்பட்டது. யாழ்ப்பாணத்தில் முதன் முதல் இதனை ஆங்கிலத்தில் அறிமுகம் செய்தவர் 'அருட்திரு லோங்' அடிகளாவார். 1952 இல் புனித பத்திரிசியார் கல்லூரியில் முதன் முதலில் இது மேடையேற்றப்பட்டது. பின்னர் தமிழிலும் மேடையேற்றும் பாரம்பரியம் ஏற்பட்டதெனலாம்.

காவலூர் யோவான்
திருமறைக் கலா மன்றம்

### மரிய சேவியர் பணி

ஆனால் இவ்வடிவத்தை தமிழுக்குரியதாகத் தத்தெடுத்துக் கொண்டது அருட்திரு நீ. மரியசேவியர் அடிகளாவார் 1962 முதல் இன்று வரை அவர் இப்பணியினை மேற் கொண்டு வருகிறார். அவரால் உருவாக்கப்பட்ட திருமறைக் கலாமன்றம் இற்றைக்கு 35 வருடங்களுக்கு மேலாக இப்பணியை யாழ்ப்பாணத்தில் மட்டுமன்றி நாடு அடங்கலாகவும் இன்று புலம் பெயர் நாடுகளிலும் மேற்கொண்டுவருகின்ற அளவுக்கு வளர்ச்சி பெற்றுள்ளது.

இப்பாடுகளின் செயற்பாட்டை மரியசேவியர் அடிகள் 'கலை கலைக்காக' என்ற நோக்கிற்காக அல்லது ஆன்மீக ஒன்றிணைப்பு சமூக கூட்டுறவைப் பேணல், 'மனிதத்துவஉறவைக் கலை மூலம் ஏற்படுத்தல்' என்ற பரந்த நோக்கிற்காகச் செயற்படுத்தினார். இச் செயற்பாடுகள் திருப்பாடுகளின் காட்சி நாடக வரலாற்றில் மிகப் பெரிய திருப்புமுனைகளை ஏற்படுத்தி நின்றன. இவை அரங்க ரீதியாக ஆய்வு செய்யப்படவேண்டியவை அரங்கில் அவர் ஏற்படுத்திய பின்வரும் தாக்கங்கள் அவரை முதன்மைப்படுத்துகின்றன:

★ நாடகத்துக்குரிய கட்டமைப்பை ஏற்படுத்தியமை;

★ இலக்கியத் தரமுடைய அரங்கியல் பண்பு வாய்ந்த தமிழ் நாடகப் பிரதிகளை ஆக்கியமை;

★ மொழியைக் கவர்ச்சிகரமாகக் கொண்டமை.

★ பெருங்காட்சிப் பண்புகளை வளர்த்தெடுத்தமை.

★ சடங்கு நிலைக்கு அப்பால் சென்று இந்நாடகங்களுக்கூடாகச் சமூகத்திற்குரிய சமகாலச் சிந்தனைகளைக் கொடுக்க முயன்றமை;

★ ஈடுபடுபவர்கள் மத்தியில் ஒழுக்கம், ஒழுங்கு கட்டுப்பாடு அதிக பயிற்சிகள் போன்றவற்றின் கூடாக ஒரு ஒழுக்கவியலை பேணியது.

★ குறியீடுகள், ஊமம், படிமங்கள் போன்றவற்றை உட்புகுத்தியமை.

★ நடிப்பு, நெறியாள்கை காட்சி விதானம், இசை ஒளி, ஒலி, வேட உடை ஒப்பனை என அரங்கு மூலகங்களைச் சிறப்பாகப் பயன்படுத்தி கலைத்துவத்தை ஏற்படுத்தியமை.

★ திருப்பாடுகளின் காட்சிக்குரிய புதிய இசை மரபை உருவாக்கியமை.

★ இன்று வரை செயற்பாடுகளை ஒரு வளர்ச்சி நோக்கில் தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றமை.

### தமிழ் நாடகம்


இம் மாற்றங்களில் பலதமிழ் நாடகவரலாற்றிலேயே எடுத்தியம்பப்படவேண்டிய வகையில் தொடக்கமாக அமைந்தமை. தமிழ் நாடக ஆய்வாளர்கள் இதனை மதமூலாம் பூசித்தவிர்ப்பதும், ஆய்வுக்கெடுக்காததும் விசனத்துக்குரியது.

இந் நாடகச் செயற்பாடானது அதிக மனித வலுவையும், பொருட் செலவையும் இறைத்துச் செய்யப்படுவதாகும் ஏறத்தாழ 250 க்குமேற்பட்ட கலைஞர்கள் இதில் பங்கு கொள்வார்கள். நீண்ட செவ்வக மேடை பெருங்காட்சிப் பண்புடன் பயன்படுத்தப்படும். 1972 இல் கோட்டை பெருஞ்சுவரையே பின்னணியாகக் கொண்டு பிரமாண்டமானதாக இம்முயற்சி முத்த வெளியில் மேற்கொள்ளப்பட்டது. ஒவ்வொருவருடமும் பெருமளவு கலைஞர்கள் பங்கொண்டு செயற்படும் மிகப்

→ 2ஆம் பக்கம் பார்க்க

---

## தவக்காலச் சிந்தனை -40



வெற்றியின் அடையாளமாகிய ஒலிவக் கிளைகளை கரங்களில் ஏந்தி இயேசு எருசலேம் நகருக்கு சென்றதின் நினைவு இது. இதைப் பாடுகளின் ஞாயிறு என அழைப்பது தான் பொருத்தம். இயேசுவின் பாடுகளுக்கு பொருள் உண்டு என விளக்கிச் சொல்லும் ஞாயிறு தான் இது:

ஒருமுறை, ''வயிற்று வலி யாருக்கெல்லாம் பிடிக்கும்'' என்று கேட்டேன். யாருமே கையை தூக்கவில்லை. நான் தொடர்ந்து விளக்கினேன். ''கடவுளிடம் வயிற்றுவலி வேண்டாம் எனக் கேட்டு அவரும் வயிற்று வலியை நீக்கி விடுகிறார் என வைத்துக் கொள்வோம். வயிற்றில் புண்வரும் ஆனால் வலி இருக்காது. வலி இல்லாததால் தொடர்ந்து சாப்பிடுவோம். புண் பெரிதாகும், ஆனால் வலி இருக்காது. ஒரு நாள் குடல் முழுக்க புண் ஆகி இறப்போம்'' என்றேன். மறுபடியும், ''யாருக்கெல்லாம் வயிற்றுவலி பிடிக்கும்'' என்றேன். மலர்ந்த முகத்தோடு அனைவரும் கரங்களை உயர்த்தினர்! உடலின் மீட்புக்காக் கொடுக்கப்பட்ட வலியை உலக மீட்புக்காக தனது இறுதி ஆயுதமாக இயேசு கையாள்கிறார். இந்த இறுதிப் போராட்டத்தில் தெய்வீகத்தையோ, ஆட்பலத்தையோ, அறிவுத் திறனையோ ஆயுதமாகக் கொள்ளாமல் கடவுளை மட்டுமே ஆதாரமாகக் கொள்கிறார்: இந்த இறுதிப் போரில், உமிழ்வோருக்கு தன் கன்னத்தையும், பிய்ப்போருக்கு தாடியையும், அடிப்போருக்கு முதுகையும் இவர் கொடுக்க வேண்டும். இது கோழைத்தனமா? நாம் வெட்கமடைய வேண்டும் என்பதற்காக பிறர் நம்மை அவமானப்படுத்தலாம். மேலும், கோபமடைவதற்காக கொடுமைப்படுத்தலாம். இவர்களுக்கு முன்னால் வெட்கமடையாமலும், கோபப்படாமலும் இருப்பது தானே வீரம்!

-காவலன்-

---

## பண்டார வன்னியன் படையின் சுவரொட்டிகள் மன்னாரில்

[மன்னார்]

மன்னார் பகுதியில்' மக்களே சிந்தியுங்கள்' என்ற தலைப்பில் 'பண்டார வன்னியன் படை' என்ற பெயரில் வெளியிடப்பட்ட துண்டுப்பிரசுரங்கள் சிலஇடங்களில் ஒட்டப்பட்டுள்ளதாக அறிய முடிகிறது.

இச் சுவரொட்டியில் அமைதிப் பூங்காவாகத் திகழ்ந்த எமது மன்னார் பிரதேசம் இன்றுமனித உரிமை மீறல்கள் மலிந்த பிரதேசமாக மாறியுள்ளது.

இந்த அசௌகரியமான நிலைமைகள் எமக்கு ஏற்படலாம். எனவே ஒன்று சேர்ந்து போராடுவோம் விடுதலைப் புலிகளுக்குத் துணை நிற்போம் எனக் குறிப்பிடப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. (உ-5)

---

## விதிமாற இரங்கியருள்தா

காரைநகர் வியாவில் ஐயனார் கோவில் சங்காபிஷேகமும் பரிவார மூர்த்தியாக அமைக்கப்பட்ட பிள்ளையார் மூர்த்த பிரதிஷ்டா கும்பாபிஷேகமும் ஒட்டிய பாமலர்)

அதிகாலை வந்தெவரும் துதிகாலை நின்று தொழ
எதிரேது மில்லருளைப் - பொழிந்த தா
அதிவேத ரும்பணிய பதிமூவ ருப் பழங்கு
நிதியாவை யும் அளிக்கும் - மணிமார்பா
கதிரோனும் சடையிலுறை மதியோனும் வாழ்வு பெற
நதியாக வருள்வாரிச் - சொரிவோனே
மதியேது மற்றுஉனைத் துதியேனைக் கவரயமன்
சதிராடி வரும்போது - மருளாதே
கதிவேறு அற்றவன்நற் கதிசேர மனம்வைத்து
அதிதீர மானவுன - தருளைத்தாராய்
சதியேது மின்றியுள பதிதோறு மலையுமெங்கள்
விதிமாற இரங்கியருள - தரவேணும்
அதிகாரம் செயுமாயச் சதிகாரர் மாளவுன
குதிபோடு மருள் வழங்க - வரவேணும்
அதிவேக ஆழியலை ஐதியோடு வாழி சொல
பதிகாரை வியாவிலமர் - ஐயனாரே
நாயன்மார்க்கட்டு

இராசையா குகதாசன்

மங்கையர்மனம்மயங்கும் மங்காத அசல் 22கரட் தங்க நகைகளுக்கு சிறந்த ஸ்தாபனம் அதுதான்

**மகாநதி ஜுவல்லறி**

72A, கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம்.

(கி/1711)

யுத்த - - -

ஐரிஸ் மோன கப்பல் மாலுமி கள் இருவரும் எம். வி மிசன் கப்பல் மாலுமி ஒருவரும் உள்ளடங்குவார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

விடுவிக்கப்பட்ட மேற்படி நான்கு கைதிகளும் தமிழீழ அரசியல் நிர்வாகப் பொறுப் பாளர் சோ. தங்கனினால் சர்வதேச செஞ்சிலுவைச் சங் கப் பிரதிநிதி செல்வி சம்சிங் நாத்திடம் ஒப்படைக்கப்பட் டனர்.

நோர்வேயின் சமாதான நல்லெண்ண முயற்சிக்கு ஊக் கம் கொடுக்கும் முகமாகவும், சமாதான முயற்சிகளில் விடு தலைப்புலிகளுக்கு இருக்கும் ஆர்வத்தை வெளிப்படுத்த வுமே இக் கைதிகள் விடுவிக் கபபட்டதாக புலிகள் தரப்பு அறிவித்துள்ளது; (ந-9)

புலிகள் : . .

கள் மற்றும் பக்க சார்பான முடிவுகள் குறித்தும், அதில் செய்ய வேண்டிய திருத்தங் கள் குறித்தும் விளக்கப்பட் டுள்ளது.

கடந்த டிசம்பர்மாதம் ஆரம்பிக்கப்பட்ட புரிந்து ணர்வுஉடன் படிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள சிலவிட யங்கள் சிறிலங்கா அரசு ஒரு தலைப்பட்சமான மாற்றங்க ளைச்செய்துள்ளது.

உடன்படிக்கையில்இருதரப் பினருக்கும் பயன் அளிக்கக் கூடிய வகையில் திருத்தங்கள் மேற்கொள்ளப்படவேண்டும் இவை இரு தரப்பினரையும் பலவீனப்படுத்துவதாக இருக் கக் கூடாது.

போருக்கு முடிவு கட்டி சமாதானத்தை நிலைநாட் டுவதற்கு வழிகோலுவதாக இருக்க வேண்டும் இருதரப் பினரும் வீணான சந்தேகங் களை தவிர்த்து பேச்சுவார்த் தைகளை நடத்துவதற்கான நல்லெண்ண சூழ்நிலைகளை உருவாக்குவதே மிக முக்கிய மானதாகும்.

### சமாதான சூழ் நிலயை உருவாக்க தலைமைப் பீடம் உறுதி

புரிந்துணர் உடன்படிக்கை, போர் நிறுத்தத்தை மேற்கொண்டு சமாதான சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டுமென்பதில் எமது தலைமைப்பீடம் உறுதியாக உள்ளது ஏற்கனவே ஏற்றால் போலவே புரிந்துணர்வுஉடன் படிக்கையில் மாற்றம் செய் யப்படவேண்டும். இதுவே போர் நெருக்கடிகளை தவிர்த்து சமாதானத்திற் கான சூழ் நிலையை உரு வாக்கும என சுட்டிக் காட் டப்பட்டுளளது.

சமாதான சூழ்நிலைக்கு உகந்ததெனக் கருதப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கை என்பது கைவிடப்பட்டு ''மனிதாபிமான நடவடிக் கைகள் பற்றிய உடன்பாடு கள்'' என அரசால் மாற் றம் செய்யப்பட்டுள்ளது.

ஆயுதபோராட்டத்தினால் பாதிக்கப்பட்ட மக்களின் துன்பங்களையும் ஆபத்துக் களையும் நீக்கநடவடிக்கை எடுப்பதன் மூலம் பேச்சு வார்த்தை நடத்துவதற்கான அத்திவாரம் ஒன்றை உரு வாக்குவதே இந்த உடன்ப டிக்கையின் நோக்கமென புதிய அறிக்கையில் திருத்தம் செய்யப்பட்டுள்ளது;

ஆனால் இந்த மனிதாபி மான நடவடிக்கைகள் பற் றிய உடன்பாடு என்பதுமாற் றம் செய்யப்பட்டு முன்பு இருந்தது போல் ''புரிந்து ணர்வு உடன்பாடு'' எனதிரு த்தம் செய்யபடல் வேண்டும்;

### குண்டுவீச்சு, எறிகணைத்தாக் குதல்கள்நிறுத்தப்படவேண்டும்

மக்களின வாழ்விடங்கள் மீது மேற்கொளளப்படும் விமானக்குண்டு வீச்சுக்கள் மற்றும் எறிகணைத்தாக்கு தல்கள் முற்றாக நிறுத்தப் படல் வேண்டும் அத்துடன் அப்பாவிப் பொது மக்களை கைது செய்தல் சித்திரவதை செய்தல் மற்றும் பாலியல் துன்புறுத்தல் முற்றாக கட் டுப்படுத்தப்படல் வேண்டும்.

ஜனநாயக ரீதியில் மக்களி னால் மேற்கொள்ளப்படும் போராட்டங்களை தடுத்து நிறுத்தவோ, அச்சுறுத்தல் விடுக்கவோ அவற்றில் ஈடுபடு பவர்களை கைது செய்யவோ கூடாது. மற்றும் பாவனை யாளர்களின் அன்றாடதேவை களை பூர்த்தி செய்யக்கூடிய அளவில் டீசல், மற்றும் பெற் றோல் போன்ற எரிபொருட் கள் வழங்கப்பட வேண்டும்; மக்களின் அடிப்படைத்தேவை யான போக்குவரத்து, விவ சாயம், கடற்றொழில் மற் றும் அனைத்துத் தொழில் களுக்கும் எரிபொருளே ஆதாரமாகவுள்ளது. இவற் றில் கட்டுப்பாடு வரையறை இருக்கவே கூடாது என்றும் தமிழ்ச்செல்வன் நோர்வே சமாதானக்குழுவிடம் எடுத் துக் கூறியுள்ளார். (வ)

## 25 வகையான பொருட்களின் தடையைஅரசு நீக்கியது

(வவுனியா)

தமிழீழ விடுதலைப் புலிகளின் கோரிக்கையை அடுத்து புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள வன்னிக்கு சுமார் 25 வகையான பொருட்களின் தடையை அரசாங்கம் நீக்கி யுள்ளது:

தடைநீக்கப்பட்டபொருட்களின் விபரம் வருமாறு, பழரசபைக்கற்வகைகள், சூப்வகைகள், தேங்காய்எண் ணெய், றோணியோபேப்பர், பிறிஸ்ரில்போட்,சாதா ரணபசை,விவசாயஉபகரணங்கள்,அஸ்பிரின்மாத்திரை கள், பாம்வகைகள், விற்றமின்வகைகள் மலேரியாதடுப் புமாத்திரைகள் அரிசி,தானிய வகை, முட்டை நூடில்ஸ், சகலவகையான குளிர்பானங்கள், வெளி நாட்டு உள்நாட்டு சிகரெட் 2ஆம் பக்கம் பார்க்க

அற்புதமான வடிவமைப்புக்களைக் கொண்ட அழகிய தங்க நகைகளுக்கு நங்கையர் நாடும் இடம்

**நியூ ராதிகாஸ் நகை மாளிகை**

189. கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

(கி/ 1712)

## கைதிகள் காயம்

(கொழும்பு)

நீர்கொழும்பு சிறைச்சாலை யில் தடுத்து வைக்கப்பட்டி ருக்கும் கைதிகள் கூரை மேல் ஏறி உண்ணாவிரதபோராட் டத்தை ஆரம்பித்த போது சிறைக்காவலர்கள் தாக்கிய தில் சுமார் 15கைதிகள் காய மடைந்துள்ளனர்.

சட்டவிரோதமாக வெளி நாடுகளுக்குச் செல்ல முற் பட்டபோது கைது செய்யப் பட்ட இவர்கள் தம்மைபிணை யில் விடுமாறு கோரியே உண் ணாவிரதப்போரை ஆரம்பித் திருந்தனர் என்பது குறிப்பிட த்தக்கது: (வ)

கறுப்பு---

கலந்து கொண்ட பெண்கள் அனைவரும் வெள்ளை உடை யணிந்து கறுப்புத் துணியால் வாயைக் கட்டியிருந்தனர்.

இதில் மன்னார் ஆயர் இரா ஜப்பு யோசப், மன்னார் எம் பி அடைக்கலநாதன் செல்வம் ஆகியோரும் கலந்து கொண்டனர்; (ந)

## மரதன் ஓட்டப் போட்டி

வட்டுக்கோட்டை, மூளாய் வீதி இளைஞர் உட லுள விருத்திச்சங்கம் சித்திரை புத்தாண்டினை முன் னிட்டு மாபெரும் மரதன் ஓட்டப்போட்டி ஒன்றினை 22-04-01 ஞாயிற்றுக்கிழமை காலை 6.00 மணிக்கு நடத்தவுளளது. இப் போட்டியில் பங்குபற்ற விரும் பும் ஆர்வமுடையோர் அனைவரும் 18-04-01 முன் பாக தமது பெயர் விபரங்களை பதிவு செய்து கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்;

**பிரவேசக் கட்டணம்: 30 00**

பதிவுகளுக்கு: **ஸ்ரீ முருகன் களஞ்சியம்**
மூளாய் வீதி, வட்டுக்கோட்டை;

குறிப்பு: போட்டி முடிவிடம் வரை கலந்து கொள்ளும் வீரர்களுக்கு பெறுமதி மிக்க பரிசில்கள் வழங்கப்படும்.

வட்டுக்கோட்டை **இளைஞர் உடலுளவிருத்திச்சங்கம்**

================================

விளம்பர அன்பளிப்பு:

**கேஷன் கொமினிக்கேஷன்**

மாவடிச் சந்தி, வட்டுக்கோட்டை;

(2901)

உள்ளத்தில் தன்னம்பிகையையும் குதூகலிப்பையும் அளிக்கக் கூடிய கவர்ச்சிகரமான

வெளிநாட்டிலிருந்து தருவிக்கப்பட்ட மகளிர் ஆடவர் குழந்தைகளுக்கான றெடிமேட் ஆடைகள் புத்தாண்டை முன்னிட்டு மிகவும் மலிவு விலையில் பெற்றுக்கொள்ள இன்றே நாடுங்கள்!

**சுஜானாஸ் அன் றெஸ்பொயின்ற்**

23, 24A, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

(கி-1713)

மலிவு மலிவு மலிவு

## ராசி சில்க்ஸ்சின் அதிரடி மலிவு விற்பனை

**புத்தாண்டை முன்னிட்டு**

புத்தம் புதிய சாறி வகைகள், நங்கையர் விரும்பும் பஞ்சாபி(வெல்வெற்), சோழி செற், ஸ்கேட், பிளவுஸ், ஸ்கேட் அன் பிளவுஸ், பேபி பாட்டி புறக்ஸ், பேபி சூட்

ஆடவர்களுக்கேற்ப ரவுசர் துணி, புத்தம் புதிய சேட், T சேட் வகைகள், பற்பல வர்ண ஆடைத்திணிசுகள் மங்கள நிகழ்வுக்கேற்ப சுபமுகூர்த்தப் பட்டுப்புடவைகள், நித்தம் நித்தம் வரும் கொட்டன் சாறிகள் என்னும் பலவற்றையும் பெற்றுக்கொள்ள யாழ் நகரில்,

## ராசி சில்க்ஸ்

70, 71 A, நவீன சந்தை (உட்புறம்), யாழ்ப்பாணம்.

மலிவு மலிவு மலிவு

[கி/1753]

இப்பத்திரிகை ''வலம்புரி'' அன்கோ ஸ்தாபனத்தாரால் இல; 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவ ர்களது அச்சகத்தில் 2001 ஆண்டு ஏப்ரல் மாதம் 08ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது]